
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

..சு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 17 புதன்கிழமை (01.01.2014) பக்கங்கள் 20 ஓசை - 092

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர்தரத்துடனும் குறைந்த செலவுடனும் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.



## புது விடியல் பூக்கட்டும்!...

பிறந்திருக்கும் புத்தாண்டின் வரவோடு எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் தோறும் புது விடியல் பூக்கட்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் ..யகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவா..ந்தா தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தி..ல் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில், ..பிறந்துவரும் ஒவ்வொரு புத்தாண்டினை ..ம் மனித குலம் நம்பிக்கையோடு வரவேற்று ..கிழ்கிறது.

கடந்து வந்த இடர்களும், துயர்களும் விடுபட்டு, பிறந்துவரும் புத்தாண்டு புது வாழ்வையும், புது மகிழ்வையும் தரும் என்ற நம்பிக்கையே எங்கும் துளிர் விடுகிறது.

இந்த நம்பிக்கையோடும், விருப்பங்களோடுமே நாமும் எமது மக்களோடு இணைந்து, பிறந்து வரும் புத்தாண்டினை வரவேற்று மகிழ்கிறோம்.

ஒவ்வொரு ஆண்டுகளும் விடைபெற்றுச் செல்லும்போது, நடந்து வந்த பாதையில், நாம் கடந்து வந்த அனுபவங்களே ஒளிமயமான எதிர்

19 ஆம் பக்கம் பார்க்க



## சுபீட்சத்தை நோக்கி...

வடமாகாண மக்களுக்கு எனது உளங்கனிந்த புது வருட வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். மலரும் புத்தாண்டு உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் சாந்தி, சமாதானம், சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டுமென வாழ்த்துகிறேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்திற்கு விடைகொடுக்கும் இவ்வேளையில் புதுவருடம் 2014 இற்குரிய வாழ்த்துரைகளையும் நல்லாசிகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப் புத்தாண்டில் சிறப்பு வாய்ந்த அனைத்தும் கிடைக்க வேண்டுமெனவும், இவற்றுடன் தங்களுக்கு மன நிறைவும், சந்தோசமும், சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன் என்றும்,

மேலும் மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சமாதான சூழ்நிலையையும் மகிந்த சிந்தனையான வடக்கின் வசந்தம் போன்ற செயல்திட்டங்களின் அடிப்படையில் வட மாகாணத்

19 ஆம் பக்கம் பார்க்க

# வலி. கிழக்கு பிரதேசசபை ..தவிசாளரின் மோசடி அம்பலம்

## சட்ட நடவடிக்கைக்கு முஸ்தீபு

(வலி.கிழக்கு)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ..வுசெலவுத்திட்டம் ஏகமனதாக நிறை..ற்றப்பட்டதாக அதன் தவிசாளர் நடாத்..போலி நாடகம் இப்போது அம்பல..கியுள்ளது.

இந்த வரவு செலவுத்திட்டத்தை முறை..றிய வகையில் சமர்ப்பித்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக பொய்ப் பிரசாரமும் செய்யப்பட்டிருக்கிறது.

மேற்படி பிரதேச சபைத்தவிசாளரின் மோசடி நடவடிக்கை தொடர்பாக இப்போது அந்த பிரதேச சபையின் உறுப்பினர்கள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வடக்கு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உட்பட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து இந்த மோசடி நடவடிக்கை தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சித்திணைக்களம் மேற்கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சுகாதாரத்தொண்டர்களின் ..போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி

(யாழ்ப்பாணம்)

..பணிப் பகிஷ்கரிப்பில் ..பட்டுவந்த குடும்பநல சுகாதார ..ண்டர்களின் போராட்டம் நேற்..ன் நிறைவுக்கு வந்துள்ளதாக ..ண்டர்கள் நேற்றுத் தெரிவித்..ர்.

..நீண்டகாலம் தொண்டர்களாக ..வையாற்றி வரும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த சில வாரங்களாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்த சுகாதார தொண்டர்களின் போராட்டத்தினை அடுத்து நேற்று வடமாகாண சுகாதார அமைச்சின் சுகாதார பணிப்பாளர்மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் இணைந்து வடமாகாண சுகாதார அமைச்சர் நேற்று தொண்டர்களைச் சந்தித்தார். இதன்போது இவர்களுக்கு சாதகமான பதில் வழங்கப்பட்டதாக தொண்டர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தினுள் தங்களுக்கு சேவைக்கால அடிப்படையிலும் கல்வித்தகைமை அடிப்படையிலும் சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடி நிரந்தர நியமனம் பெற்றுத் தருவதாகவும் அதுவரை தொடர்ந்து சேவையினை வழங்குமாறும் கேட்டுள்ளனர். அதற்கு அமைவாக நாம் போராட்டத்தைக் கைவிடுகின்றோம். எமக்கான சரியான தீர்வு கிடைக்காத விடத்து மீண்டும் ஏப்ரல் மாதத்தில் நாம் போராட்டம் நடத்துவோம் என அவர்கள் தெரிவித்தனர். (இ)

## ..அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ..டில்லி செல்லத்திட்டம்



(கொழும்பு)

இம்மாதம் இறுதிப்பகுதியில் புதுடில்லிக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இந்தியாவுக்கு பயணமாகவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் உட்பட இந்தியாவின் முக்கிய அரசி..ல்தலைவர்களை அவர் சந்தித்து பேச்சுக்களில் ஈடுபடவிருக்கிறார்.

மேலும், இந்திய வெளிவிவகார

19 ஆம் பக்கம் பார்க்க

## கனேடிய எம்.பி. மன்னாருக்கும் விஜயம்



(மன்னார்)

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபை ஈசன் மன்னாருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்துள்ளார்.

அங்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் உட்பட பல பிரமுகர்களைச்சந்தித்து களநிலைவரம் பற்றி அறிந்துகொண்டார்.

## வாக்காளர் பட்டியல் வெளியாகியது நேற்று

2013ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் நேற்று இறுதி செய்யப்பட்டுள்ளது. தேர்தல்கள் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிலையில், இறுதி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலை கிராம சேவையார்கள் மற்றும் சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுவாக ஒவ்வொரு வருடமும் வாக்காளர் பெயர் பட்டியல்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. அமர்வின்போது கியூபா இலங்கைக்கு கைகொடுக்கும்

### கியூபாவின் தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமர்வின்போது இலங்கைக்கு உறுதுணையாக செயற்படுவதற்கு கியூபா அரசு தயாராக இருப்பதாக அந்நாட்டின் தூதுவர் இந்திரா லோப்பஸ் கூறியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மார்ச் அமர்வின்போது கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படும். இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தோற்கடிக்க உதவுவதாக இலங்கையின் நட்பு நாடுகளில் ஒன்றான கியூபா, உறுதியளித்துள்ளது. கொள்கை அடிப்படையில் எந்த ஒரு நாட்டுக்கும் எதிரான குறிப்பான தீர்மானங்கள் சர்வதேச

19 ஆம் பக்கம் பார்க்க




10



மடியில் கனமில்லா விட்டால்

17




விபரீதம்

# காசநோயாளர்களின் எண்ணிக்கை குடாநாட்டில் குறைவடைந்தது

(யாழ்ப்பாணம்)

காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளோர் தொகை கடந்த ஆண்டில் (2013) கணிசமான அளவு குறைந்துள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டில் காசநோயினால் பீடிக்கப்பட்டு 319 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை கடந்த ஆண்டில் (2013) 265 பேர் மட்டுமே இவ்வாறு காசநோய்க்கான சிகிச்சையினைப் பெற்றுள்ளதாக காசநோய்க்கான பண்ணை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.



இவ்வாறு 2013 இல் சிகிச்சை பெற்ற 265 பேரில் 12 பேர் இறந்துள்ளதாகவும், 5 பேர் சிறுவர்கள் எனவும் இறந்தவர்கள் அனைவரும் 40 வயதுக்கு மேற்பட்ட காசநோயாளர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் காசநோய்க்கு ஆளானவர்களின் எண்ணிக்கை சிகிச்சை அளிக்கப்பட்ட அளவின் பதிவுகளின்படி வீழ்ச்சி கண்டுள்ளதாகவும், ஆயினும் சிகிச்சை பெறாது பலர் வெளியில் இருக்கக்கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் காசநோய் குறித்த விழிப்புணர்வு மற்றும் எமது சேவைகள், அறிவுரைகளுக்கமைய இந்நோயைத் தடுக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# குத்தகை கோரப்படாத நிலையில் திருநெல்வேலிச் சந்தை

(திருநெல்வேலி)

திருநெல்வேலிச் சந்தை இன்று தொடக்கம் நல்லூர் பிரதேச சபையினால் நடத்தப்படவுள்ளது. 2014 ஆம் ஆண்டுக்கான சந்தைக் குத்தகையைக் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரம் இரண்டு தடவைகள் கோரப்பட்டிருந்த நிலையில் விண்ணப்பங்கள் கோரப்படாததால் பிரதேச சபை சந்தையை நடத்தவுளளது. வேறு எவரும் குத்தகை எடுக்கும் வரை சபை சந்தையை நடத்தும்.

இன்று முதல் தரகர் தொல்லையும், விவசாயிகளினால் கொண்டுவரப்படும் உற்பத்திப் பொருட்களுக்கான கழிவுகளும் இல்லாமல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சந்தைக்கு உற்பத்தியாளர்களினால் எடுத்துவரப்படும் பொருட்களுக்கு 10 கிலோ அளவில் கழிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. தரகர்களின் தொல்லையை ஒழிப்பதற்கு பொலிஸாரின் உதவி நாடப்படும் எனவும் சொல்லப்பட்டது. குத்தகைப் பணமாக நான்கு வீதமே அறவிடப்படும்.

உற்பத்தியாளர்கள் தமது பொருட்களைக் கொண்டுவந்து விற்பனை செய்வதற்கு சந்தையின் மேல்மாடியில் உழவர் சந்தை ஒன்றும் தனியாக ஏற்படுத்தப்படவுள்ளது. இதில் விவசாயிகள் எந்தவித கழிவுமின்றி தமது பொருட்களை விற்பனை செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (137)

# இளவாலை வைத்தியசாலைக்கு ஒரு மாத காலத்தினுள் நிரந்தர வைத்தியர்

(யாழ்ப்பாணம்)

இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கான நிரந்தர வைத்தியர் ஒருவர் ஒருமாத காலத்தினுள் நியமிக்கப்படுவார் என வடமாகாண சுகாதார அமைச்சர் உறுதியளித்துள்ளதாக இளவாலை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இளவாலை வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி சி.கணேசலிங்கத்தின் சேவை நீடிக்கப்படாது நிரந்தரமான வைத்தியரும் நியமிக்கப்படாதது குறித்து நேற்று நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் வடமாகாண சுகாதார அதிகாரிகள், யாழ். பிராந்திய சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் மற்றும் செயலாளர்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது வைத்திய அதிகாரியான சி.கணேசலிங்கத்திற்கு வயது 73 என்பதால் சேவையில் நீடிப்பு வழங்கமுடியாது எனவும், இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் கண்டிப்பாக நிரந்தரமாக வைத்திய அதிகாரி ஒருவரை நாம் நியமிப்போம் எனவும் இச்சந்திப்பில் தெரிவித்ததாக இளவாலை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் உப செயலாளர் வே.சண்முகநாதன் தெரிவித்தார். (இ)

# ஆட்டுக் கொள்ளையர்கள் காரைநகரில் கைது

(காநரைகர்)

ஆட்டுக் கொள்ளையர்கள் காரைநகரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் பி.ப. 3.30 மணியளவில் காரைநகர் பிரதேசத்தில் ஆட்டுக் கொள்ளையர்கள் ஆடுகளை மோட்டார் சைக்கிளில் பிடித்துக் கொண்டு ஓடுவதாக பிரதேச மக்கள் செய்த புகாரின் அடிப்படையில் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் வி.கண்ணன், வட்டுக்கோட்டை பொலிஸ் அதிகாரிகளிடமும் ஊர்காவற்றுறை பொலிஸ் அத்தியட்சகரிடமும் தொடர்பு கொண்டு குற்றவாளிகளை விரைவாக கைதுசெய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து சந்தேகநபர்கள் இருவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர். மற்றவர் தேடப்பட்டு வருகின்றார்.

வட்டுக்கோட்டை பொலிஸார் 3 ஆடுகளையும் மோட்டார் சைக்கிள்களையும் மீட்டுள்ளனர். கடத்திச் சென்ற ஆடுகளில் ஒன்று இரண்டு குட்டிகளை ஈன்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2014 ஆம் ஆண்டிற்கான

**பதவி வெற்றிடங்கள்**

**U.S.A.** நிறுவனம் தனது புதிய கிளை நிறுவனங்களை புதிய ஆண்டில் வடமாகாணத்தில் ஆரம்பிக்கவுள்ளது.
அடிப்படைத் தகைமையான O/L உடன் எம்முடன் இணைந்து கொள்ள ஓர் அரிய வாய்ப்பு

- அடிப்படைச் சம்பளம்
- தங்குமிட வசதி
- வெளிநாட்டில் பணிபுரியும் வாய்ப்புகள்

(R/260)

**தொடர்பு: 0776219536, 0770771377**

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1021 | திகதி 30.12.2013

வெற்றி எண்கள்: 10 11 20 63 | ஆங்கில எழுத்து: G

ஜக்பொட் பரிசு ரூ. 1,79,75,720/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,79,75,720/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 6,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 263 | 1,000/= | ரூ. 2,63,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 443 | 1,000/= | ரூ. 4,43,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11807 | 60/= | ரூ. 7,08,420/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5985 | 40/= | ரூ. 2,39,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154221 | 20/= | ரூ. 30,84,420/= |
| ஆங்கில எழுத்து | 22555 | 20/= | ரூ. 4,51,100/= |
| | | மொத்தம் ரூ. | 67,89,340/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 605484079-4-34 |
| ஹம்பாந்தொட்டை | 605485805-8-48 |
| அம்பாறை | 605487640-3-03 |
| திருக்கோணமலை | 605493001-3-23 |
| அநுராதபுரம் | 605491816-3-33 |
| பொலன்னறுவை | 605486743-6-36 |
| மாத்தளை | 605484854-3-13 |
| குருநாகல் | 605480764-6-36 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 71,89,340/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 18,277,120/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.01.02 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333546/7

(C/3213)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
### ஆதனவரி அறிவித்தல் - 2014

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி யாழ்ப்பாணம் மாநகர சபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

01. மாநகரசபையின் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம், 247 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நேர் முன் ஆண்டான 2013 ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டை குறிப்பிடப்பட்ட விடயங்களில் அவசியமெனக் கருதப்படக்கூடியதாக அத்தகைய திருத்தங்களுடன் 2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாக கைக்கொள்ளுதல்.

02. அடுத்து திருத்தியபடியான முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் நியதிப்படி யாழ்ப்பாணம் மாநகரசபை பரிபாலன எல்லைக்குட்படும் சகல வீடுகள் ஒவ்வொரு விவரணத்தையும் கொண்ட கட்டடங்கள், சகல காணிகள், குடிமனைகள் எதனதும் வருடாந்தப் பெறுமதியின் மீது 2014 ஆம் ஆண்டிற்கு பின்வரும் வீதங்களை உண்டுபண்ணவும் விதிக்கவும்.

(அ) மாநகர சபை பரிபாலன எல்லைக்குட்படும் வட்டாரம் 01 முதல் 23 வரைக்கும் உள்ள சகல வட்டாரங்களிலும் ஆறு சதவீதத்திலான (06%) ஒரு விகிதம்

03. (அ) மேற்கூறப்பட்ட வீதவரிப்பணங்கள் யாவையும் நான்கு சம கந்தாய தவணைகளில் ஆண்டு முறையே மார்ச், 31, ஜுன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆம் திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படவேண்டும்.

(ஆ) 2014 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வீத வரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்து சதவீதம்) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீத வரி வருமதியாக உள்ள அந்த கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாயவரி செலுத்தப்பட்டால் ஒரு 05% (ஐந்து சதவீதம்) கழிவு அனுமதிக்கப்படும்.

04. மேற்கூறப்பட்ட பந்தி 3 (அ) இல் குறிப்பிடப்பட்ட உரிய திகதிகளிற்கு முன்பு குறித்த வீத வரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% (பதினைந்து சதவீதம்) இலும், மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% (இருபது சதவீதம்) இலுமான விறாந்து செலவு அறவிடப்படும்.

05. 2014 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகர ஆதனவரிப் பகுதியில் நேரடியாக சமுகமளித்து ஆதனவரி அறிவித்தலை பெற்றுக்கொள்வதுடன் 2014 ஆம் ஆண்டு ஆதனவரியினைத் தாமதமின்றிச் செலுத்த முடியும்.

**திருமதி யோகேஸ்வரி பற்குணராசா**
**முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

**மாநகரசபை அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**
**2013.12.30**

(C/3262)

# புத்தாண்டு வரவேற்பு நிகழ்வை

# அலுவலகங்கள் அனைத்திலும் நடத்துங்கள்

## உள்நாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர்

ஆங்கிலப் புத்தாண்டு தினமான இன்று புதன்கிழமை சகல அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களிலும் புத்தாண்டைவரவேற்கும் நிகழ்வை ஒழுங்குபடுத்தி நடாத்துமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள திணைக்களத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

2014 புதிய ஆண்டு பிறக்கும் இன்றையநாளில் சகல திணைக்களங்களும் அலுவலகங்களும் தேசியக் கொடி ஏற்றி தேசிய கீதம் இசைத்து புத்தாண்டை வரவேற்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்கள் அனைவரும் இன்றையதினம் மூவின மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும் அரச சேவையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய [illegible] விடங்கள் பற்றியும் சத்தியம் உறுதியுரை எடுக்குமாறு வட மாகாணத்தைச் சேர்ந்த சகல அரச திணைக்களங்கள், நிறுவனங்களைச் சேர்ந்த செயலாளர்கள் மற்றும் திணைக்களத்தலைவர்களுக்கு சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டிலுள்ள சகல திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் இன்றையதினம் காலை 9 மணிக்கு இந்நிகழ்வை நடாத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுவட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்லூரியில் க.பொ.த(சா/த)ப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று வருவதனால் 2014 புதிய ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கல்லூரி ஆசிரி[illegible]ளுக்கான கூட்டம் நாளை வி[illegible]ழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி கணனி விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் அதில் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

# ஜனவரி 15இல் கால்கோள் விழா

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதி தரம் ஒன்று மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா நடைபெறவுள்ளது.

இதன்படி வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளிலும் இந்நிகழ்வுகளை சிறப்புற நடாத்துமாறும் புதிய மாணவர்களை கல்வி கற்கும் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் வரவேற்று செல்வதுடன் கலை நிகழ்வுகளையும் நடாத்தி மாணவர்களை மகிழ்ச்சிப்படுத்துமாறு பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (109)

# கலந்துரையாடல்

வடமாகாணத்திலுள்ள சகல வலயங்களிலும் கடமையாற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உலக உணவுத் திட்டத்தை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 6ஆம் திகதி மருதனார்மடத்திலுள்ள வடமாகாண கல்வித்திணைக்கள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உலக உணவுத்திட்டதுடன் தொடர்பான சகலரையும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு மாகாணக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (109)

# ஈவினை கிராமத்தில் வீதிப்புனரமைப்பு பணிகள்


(சிறுப்பிட்டி)

ஈவினை கிராமத்தில் பல வீதி அபிவிருத்திப் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன. அதற்கமைய மங்களம்மன் வீதி அகலிக்கும்பணியும் புது[illegible]வீதி போடும் பணியும், ஈவிணை புன்[illegible]லக்கட்டுவன் வீதி புனரமைப்பு பணியும் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பணிகளின் தொடர்ச்சியாக ஈவினை ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தான ஆலய தேரோடும் வீதி மழை காலங்களில் சகதி உருவாகும் நிலையில் உள்ளமையால் அதற்கு தார் வீதி போட்டுத் தருமாறு பணிகளுக்கு பொறுப்பானவரிடம் அந்த ஆலய குருக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் வீதிக்கு கற்களை தருமிடத்து தாம் இலவசமாக செய்து தருவதாக உறுதியளித்தனர்.

அத்தோடு ஈவினை கிராமத்து உறவுகளும் தம்மால் இயன்றவரை கற்கள் பறிப்பித்து தரு கிறார்கள். மற்றும் வெளிநாடு வாழ் புலம்பெயர்மக்கள் ஈவினை, ஸ்ரீகற்பகவிநாயகர் மெய்யடியார்களும் இத்திருப்பணிக்கு தம்மால் இயன்ற உதவிகளை செய்யவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# ஒதியமலை விநாயகருக்கு மகாகும்பாபிஷேகம்



(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் ஒதியமலை அருள்மிகு விநாயகர் ஆலயத்தில் 1008 சங்காபிஷேக வைபவம் வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

ஒதியமலை அருள்மிகு விநாயகர் ஆலயம் 1984 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக அழிவடைந்த நிலையில் மீண்டும் 30 வருட போர் முடிவடைந்து மீண்டும் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு விநாயகர் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கடந்த நவம்பர் மாதம் எண்ணெய் காப்பு வைபவத்துடன் ஆரம்பமாகி 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று இறுதி நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று 1008 சங்காபிஷேகம் இடம் பெற்றது. பிரதம குருக்கள் சிவ சிதம்பரமகேந்திரநாதக் குருக்களின் தலைமையில் பூசைகள் இடம் பெற்றன. தொடர்ந்து விநாயகப் பெருமான் உள்வீதி வெளிவீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தவண்ணம் ஆலயத்தைச் சென்றடைந்தார். தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். (40)

# ஜெனீவா திருவிழா




வருகின்ற மார்ச் மாதத்தில் நடக்கப் போகிறது ஜெனீவாத் திருவிழா.

வற்றாப்பளைப் பொங்கலுக்கு போகிறதைப் போல அல்லது மடுப் பெருநாளுக்குப் போகிறது போல ஜெனீவாவுக்கும் கொஞ்சப்பேர் போகிறார்கள்.

பெரும்பாலும் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து கொஞ்சம் கூடுதலானவர்கள் போவார்கள்.

இங்கே – இலங்கையில் இருந்து தமிழ்க் கூட்டமைப்பினரும் ஜெனீவாத் திருவிழாவுக்காக பெட்டி படுக்கைகளை அடுக்குப்பண்ணத் தொடங்குகிறார்கள்.

இந்த ஜெனீவாத் திருவிழாவுக்கு காணிக்கைத் தெய்வம் யார் தெரியுமா? நவிப்பிள்ளை என்ற திருமதி நவநீதம்பிள்ளை.

இந்தத் தெய்வமும் ஜெனீவாவில் உற்சவதேவியாக வலம்வருவதற்காக தன்னைத் தயார்படுத்திக்கொள்கிறார்.

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் என்ற பெயரில் ஒரு அறிக்கையோடு அம்மணி எழுந்தருளப்போகிறார்.

இதுவரை காலமும் இலங்கையில் நடந்தது ஏதோ பூப்பந்தாட்டம் அல்ல. அது இரத்தம் சிந்தும் போர்.

இந்தப் போரிலே குற்றவாளிகள் ஒருவரல்ல இருவரல்ல. ஒரு தரப்போ இரண்டு தரப்போ மட்டும் உள்ளடங்குவதல்ல.

இங்கே புலிக்கும் பங்குண்டு பூனைக்கும் பங்குண்டு. நரிக்கும், நாய்க்கும், எலிக்கும், எருமைக்கும் எல்லாவற்றிற்கும்கூட இரத்தக் கறைகள் உண்டு.

ஆனால், ஒன்று அரசு என்ற வகையில் அதற்கே கூடுதல் பொறுப்புகள் உண்டு.

எனவேதான் நவி அம்மா இலங்கை அரசின் கழுத்தில் ஆங்காரமாக வேலாயுதத்தையோ சூலாயுதத்தையோ பாய்ச்சப் பார்க்கிறார்.

ஆனால், இந்த நவி அம்மா அதிகாரத்தில் இருக்கும்போதுதான் இலங்கையில் நாயும் புலியும் விளையாட்டு நடந்தது.

மனிதத் தலைகள் ஈவிரக்கமின்றி வெட்டி எறியும்போது அம்மா அவர்கள் தார்மீகப் பொறுப்போடு தன்னுடைய பதவியை பாவிக்கவும் இல்லை. அதைத் துறக்கவும் இல்லை.

அன்றைக்கு இந்த தெய்வம் கண் திறந்திருந்தால் இன்று இது உலகத்தின் கண்கண்ட தெய்வமாக மாறியிருக்கும்.

என்ன செய்வது பெரியண்ணன்மார் எல்லாம் ஒன்றாகக் கூடி காய்களை வெட்டி எறியும்போது அம்மா கண்ணை மூடிக்கொண்டிருந்தார்.

வெட்டியெறியப்பட்ட தலைகளை எண்ணுவதற்காக அல்லது ஆடுபுலி ஆட்டம் நடந்த சுடலைவெளியைப் பார்ப்பதற்காக பான் கீ மூன் என்ற ஐ.நா.வின் அரசர் வந்தபோது அம்மா அதைக் கண்டிக்கவில்லை.

ஆனால், அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம் வரை பக்கம் பக்கமாக அறிக்கைகளை எழுதி ஐ.நா. சபையில் அடுக்கிக்கொண்டே இருக்கின்றார்.

போர்க் குற்றங்கள் ஏதோ மாடுபிடித்தவன், கோழிக்கள்ளன், கசிப்புக் காய்ச்சியவன் போன்றவர்களின் குற்றங்களைப்போல சாதாரண மானவை அல்ல.

அது கழுவேற்றத்தையும் விட கொடூரமான தண்டனைக்குரியது.

ஆனால், இதைப் பேசிப்பேசியே இலங்கையை நாசமாக்குவது அதை விட பெரிய குற்றம்.

யுத்தத்தின் போதும் ஏமாற்றினார்கள். யுத்தம் முடிந்த பிறகும் ஏமாற்றுகிறார்கள்.

குற்றங்களை பட்டியல்போட்டு அறிக்கைகளை அடுக்கி வைப்பது ஒரு போதும் உபயோகப்படாது.

குற்றங்கள் நடைபெறாமல் தடுத்து நிறுத்துவதே ஆரோக்கியமான மருந்து.

நவிப்பிள்ளைக்கோ, ஐ.நா. அரசருக்கோ இதெல்லாம் விளங்காதளவுக்கு அவர்கள் எல்லாம் விரல் சூப்பும் சின்னஞ்சிறுசுகள் அல்ல.

என்ன செய்வது, பெரியண்ணன்களின் சண்டித்தனத்திற்கு சாமரம் வீசுவதற்காக ஐ.நா. என்றதொரு அமைப்பு உலகரங்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

உலகம் எங்கும் பாதிக்கப்பட்ட மக்கள், உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் மூன்றில் இரண்டுக்கும் மேலாக சிதறிக் கிடக்கின்றார்கள்.

நீதியான போராட்டங்களுக்காக ஐ.நா. ஒருபோதும் பச்சைக்கொடி காட்டியதில்லை.

இனிமேலும் அப்படியொரு அதிசயம் நடந்துவிடாது.

இதையெல்லாம் நன்றாக அறிந்தவர்கள் தமிழ்க் கூட்டமைப்பினர். ஆனால், ஜெனீவாத் திருவிழா அவர்களுக்கு ஒரு கரும்புக்காடு.

அடிச்சது சான்ஸ் என்ற மாதிரி உலகச் சுற்றுலா செய்ய ஒரு நல்ல வாய்ப்பு.

தமிழர்களை எப்படியும் ஏமாற்றலாம் என்பது இந்தத் திருவிழாவுக்கும் இந்த கூத்தாடிகளுக்கும் இந்தப் பெரும் தெய்வங்களுக்கும் நன்றாகத் தெரியும்.

ஆண்டுதோறும் அழுது புலம்பினாலும் மாண்டார் வருவாரோ என்ற மாதிரி ஜெனீவாத் திருவிழா எத்தனை தரம் நடந்தாலும் ஈன(ழ)த் தமிழர்களுக்கு விடிவில்லை.

ஆனால், கரும்பு தின்னிகளுக்கும் திருவிழாத் தெய்வங்களுக்கும் ஒரு குறையும் இல்லை.

வரலாறு என்றால் இப்படித்தான். மூடர்களின் மீது சவாரிவிடும் குதிரை அது.

உண்மையாக நடந்துவரும் மனிதனுக்கு எந்த உபதேசமும் தேவையில்லை. - வாரியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**இன்றைமை வருத்தும் இன்னல்கள் மாய்க**
**நன்மை வந்தெய்துக தீதெலாம் நலிக... –பாரதி**

2014. நாம் மற்றுமொரு புத்தாண்டின் தொடக்கத்தில் நிற்கிறோம். வருடத்தின் தொடக்கநாளில் அந்த வருடத்திற்கான சில தீர்மானங்களை ஒரு பிரதிக்ஞையாக எடுப்பது பலரது வழக்கம். தங்களது கடந்த வருடச் செயற்பாடுகளில் கண்ட குறைகளை நீக்கிக் கொள்ளும் விதமாகத் தம்மை எந்தெந்த வகையில் வரும் நாட்களில் மாற்றிக்கொள்ள வேண்டும் எனச் சுய விமர்சனத்தோடு சிந்திப்பதாக வருட முதல்நாள் அமைகிறது.

நம்முடைய வாழ்வு சரியாக இல்லை என்று கண்டால் நம்மை மாற்றிக் கொள்ள முயல்வதுதான் சரியாக இருக்கும். இந்த விசேட நாளில், நாம், நம்மைவிடத் துயர் சுமப்போரைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். அவர்களின் கஷ்ட வாழ்வை அரசியலாக்கிக் கொள்ள முயலாமல், அதை மாற்றுவதற்கே முயல வேண்டும்.

வசதியான வாழ்க்கை அமைந்துவிட்டவர்களின் அரசியல் கோஷங்களும் ஆர்ப்பாட்டங்களும், நடந்துமுடிந்த போரினால் பாடுகேடாக நொந்து அவல வாழ்வுடன் இருக்கும் மக்களின் கஷ்டங்களை மாற்றுவதற்கான குரல்கொடுப்பாக இருப்பதில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது.

ஆவேச ஆர்ப்பாட்ட முழக்கங்களின் மூலம் அந்த மக்களது பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதில் இருந்து தப்பித்துச் செல்கிறார்கள். அவர்களின் கண்ணீரைக் கவனிக்கவோ வாழ்க்கையை மேம்படுத்தவோ எதுவும் செய்யாமல் பலிகளைத் தேடிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகளே பெரும்பான்மை பலம் கொண்டவர்களாக நம் மக்களுக்கு வாய்த்திருக்கிறார்கள்.

இவர்கள் எப்படி வீடின்றி, தொழிலின்றி, பிள்ளைகளின் படிப்பின்றி, உணவுக்கும் நிழலுக்கும் அல்லாடும் மக்களை கவனத்தில் கொள்வார்கள்? நாம் ஒவ்வொருவரும் இதை மன திருத்திச் சிந்திக்க வேண்டும். வசதியாக வாழ்ந்துகொண்டு புத்தாண்டுத் தீர்மானம் எடுப்பவர்களின் நினைவில் அந்த மக்களின் அவலக்கண்ணீர் வரவேண்டும்.

விவேகானந்தர் சொல்கிறார்: "நீங்கள் கடவுளைத் தேடி வேறு எங்கே செல்ல வேண்டும்? ஏழைகளும், பரிதாபத்திற்குரியவரும், பலவீனரும் கடவுளர்கள் இல்லையா? முதலில் அவர்களை ஏன் வணங்கக் கூடாது? உங்களிடம் அன்பிருக்கிறதா? அப்படியென்றால் நீங்கள் சர்வ வல்லமை படைத்தவர்களே. நீங்கள் தன்னலமற்றவரா? அவ்வாறாயின் நீங்கள் தடுத்தற்கரியவர்களே. அவலப்படுவோர் கஷ்டத்தை நீக்கக் கருதும் தன்னலமற்ற அன்புதான் வேண்டும். கடலின் அடியாழத்திலும் தனது குழந்தைகளைப் பாதுகாக்கக் கூடிய கடவுள் அதுதான்."

மக்கள் தங்கள் வாழ்வைத் தொடர்ந்தும் துன்பநிலைகளில் விட்டுவைக்க மாட்டார்கள் என்று கருதியே ஜனநாயக முறையில் தங்களது தலைவர்களைத் தேர்ந்து கொள்கிறார்கள். அந்த மக்களின் அவஸ்தையையும் விரக்தியையும் தங்கள் குறுகிய அரசியல் திருப்திகளுக்கும் அதிகாரப் பெருமிதங்களுக்குமாகப் பயன்படுத்திக் கொள்வது ஒருபோதும் தர்மமாகாது. அந்த அரசியல் ரோசமும் தேசிய வீம்பும் அறத்தின்பாற்பட்டவையல்ல.

மக்களின் கஷ்டங்களை உணர்வதும் அதை மாற்றுவதன் உடனடி அவசியத்தை யதார்த்தங்களைப் புரிந்துகொள்வதும் விட்டுக்கொடுப்புகளுக்குத் தயாராகுவதும் விரைந்து செயற்படுவதுமே நல்ல தலைமைத்துவமாக இருக்க முடியும்.

'பொறாமையும் சீற்றமும் உன் வாழ்நாளைக் குறைக்கும். உன் திட்டங்களால் உனக்கு நீயே துன்பங்களை ஏற்படுத்திக் கொள்ளாதே' என்கிறது விவிலியம். மகிழ்ச்சியே மனிதரை வாழவைக்கிறது. அதைக் கொடுப்பதே மானுடதர்மம்; குழப்புவதல்ல.

- ஆசிரியர்.

# அரசியல் தீர்வு காண்பதில் பொறுப்புணர்வு அவசியம்

## அமைச்சர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

அரசியல் தீர்வுப் பயணத்தில் அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும் என மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வைக் காண்பதற்கு ஆளும்தரப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நெகிழ்வுத் தன்மையுடன் செயற்பட வேண்டியது மிக அவசியமாகும்.

உலகில் கடந்த காலங்களில் சமாதானம் அடையப்பெற்ற நாடுகளில் அனைத்துத் தரப்பினரும் இவ்வாறு நெகிழ்வுத் தன்மையுடனும் விட்டுக்கொடுப்புடனுமேயே செயற்பட்டுள்ளனர். அதற்கு சிறந்த உதாரணமாக தென்னாபிரிக்காவை குறிப்பிட முடியும்.

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதன் மூலமே நாட்டின் சிறப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்த முடியும். மற்றும் அரசியல் ஸ்திரமிக்க நாடாக இலங்கையை உருவாக்க முடியும்.

எனவே விரைவாக நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டியது அவசியமாகும்.

அந்தவகையில் அரசியல் தீர்வை எட்டுவதற்கான சிறந்த இடமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே காணப்படுகின்றது.

எனவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வருவதன் மூலம் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காணலாம்.

ஆனால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வரமாட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவருகின்றது. நம்பகத்தன்மை தொடர்பான விவகாரமே இதற்கு காரணமாக கூறப்படுகின்றது.

கூட்டமைப்புக்கு சந்தேகங்கள் இருக்கலாம். எனவே கூட்டமைப்பு நம்பிக்கை கொள்ளும் வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டியது அவசியமாகும்.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நெகிழ்வுத் தன்மையுடன் தேசிய பிரச்சினை தீர்வு விவகாரத்தில் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே அரசாங்கம் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும்.

காரணம் ஒரு பிரச்சினைக்கு தீர்வை நோக்கி செல்லும்போது அங்கு விட்டுக் கொடுப்புக்கள் என்பது தேவையாகும். எனவே தேசிய பிரச்சினைக்கான தீர்வு செயற்பாட்டு விடயத்தில் அரசாங்கமும் கூட்டமைப்பும் தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.

அதாவது கூட்டமைப்புக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும் என்பதுடன் கூட்டமைப்பும் நெகிழ்வுத் தன்மையுடன் செயற்படவேண்டும்.

உலகில் பல நாடுகளில் சமாதானம் அடையப் பெற்றுள்ளது. அவ்வாறு அடையப் பெற்ற சமாதானமானது விட்டுக் கொடுப்புக்கள் மற்றும் நெகிழ்வுப் போக்குகளின் மத்தியிலேயே இடம்பெற்றுள்ளது.

இது 50 வருட கால பிரச்சினையாகும். எனவே இதில் கடினங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் அவற்றை நாங்கள் வெற்றிக்கொண்டு பயணிக்க வேண்டியது அவசியம் என்றார்.

# குற்றச்செயல் மனோநிலையை கராத்தே கலை தடுக்கும்

## மட்டக்களப்பு அரச அதிபர்

(கொழும்பு)

யுத்தத்தின் பிடியில் இருந்து மீண்டு வரும் சூழலில், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை கராத்தே கலைகளின் ஊடாக மாற்றமுடியும். இதன் மூலம் வளமுள்ள இளைஞர் சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மட்டக்களப்பு சோட்டோ கான் கழகத்தின் இவ்வருடத்துக்கான கௌரவிப்பு விழாவில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில் பெண்களும் சிறுவர்களும் பல இன்னல்களுக்கும் சவால்களுக்கும் முகம்கொடுத்து வருகிறார்கள். பொதுவாக பாடசாலைகளிலும் கல்வி நிறுவனங்களிலும், தங்களது திறமைகளை வெளிக் கொண்டுவருவதற்கு பல சவால்கள் உள்ளன. இவ்வாறான சூழலில் தற்காப்புக் கலைகளால் தன்நம்பிக்கைகளும், முயற்சிகளும் மேம்பட்டு வருகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழலில் இளைய சமூகத்தினர் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களாகவும், வன்முறைகளை மேற்கொள்பவர்களாகவும் மாறி வருகின்றனர். இவர்களை வழிப்படுத்துவதற்கு தற்காப்புக் கலைகளும் பெரும் பங்கு வகிக்கின்றன.

மட்டக்களப்பு நகரில் அழகுபடுத்தல் திட்டங்களின் கீழ் பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுக்கு பல மில்லியன் பணம் செலவிடப்பட்டுள்ளது. முதல் நாள் நன்றாக இருக்கும் இடங்கள் மறுநாள் காலையில் பார்க்கையில் மின்விளக்குகள் சேதப்படுத்தப்பட்டும், பொருள்கள் உடைக்கப்பட்டும் காணப்படுகின்றன.

மட்டக்களப்பில் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்படும் இடங்களில் இளைஞர்களினால் வேண்டப்படாத நிகழ்வுகள் நடாத்தப்படுவதுடன் அவை சேத மாக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் பல அபிவிருத்திப் பணிகள் மக்கள் அனுபவிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக காந்திப்பூங்கா அதன் சுற்றுச்சூழல் மக்களின் அமைதிப் புகுதியாக இருக்கின்றது. ஆனால் அங்கு இரவு வேளையில் கூடும் இளைஞர்கள் அங்கு வேண்டத்தகாத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

சிலவேளைகளில் காலையில் ஊழியர்கள் சென்று பார்க்கும்போது அங்குள்ள பொருட்கள் உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. நாங்கள் இது தொடர்பில் சிந்திக்கவேண்டும்.

எமது சொத்துக்களை நாங்களே இல்லாமல் செய்யும் நிலையை தடுக்க அனைவரும் சிந்தித்து செயற்படவேண்டும். தவறான செயற்பாடுகள் மேற்கொள்வோர் தொடர்பில் அனைவரும் விழிப்புடன் செயற்படவேண்டும் என்றார்.

# இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் 2014 இல் 16 ஆயிரம் வீடுகள் பூர்த்தியாகும்

## இந்திய உயர்ஸ்தானிகராலயம் தகவல்

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் 2014ஆம் ஆண்டு 16 ஆயிரம் வீடுகளை கட்டிமுடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. யுத்தத்தால் அகதியானவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 43000 இந்திய வீட்டுத் திட்டத்தில் 10184 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்தில் 1832 வீடுகளும், 3090 வீடுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும், 3540 வீடுகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும், 1074 வீடுகள் மன்னார் மாவட்டத்திலும், 648 வீடுகள் வவுனியா மாவட்டத்திலும், 66 வீடுகள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் 100 வீடுகள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டிற்கும் 2,50,000 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. 7.8 மில்லியன் ரூபா பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்பிலிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டப் பணிகள் 2012 ஒக்ரோபர் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டில் 16,000 வீடுகளை கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. 2015ஆம் ஆண்டில் 17,000 வீடுகளை கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மற்றவர்கள் மீது வெறுப்பை உமிழக்கூடிய சித்தாந்தத்தைப் புரிந்து கொள்ள முயலுதல்



**இனரீதியாக கொடுமைகளுக்கு ஆளாகி மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள மக்கள், தங்கள் சொத்து சுகங்களை மட்டுமல்ல, தங்கள் அறநெறிப் பண்புகளையும் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய் இருக்கக்கூடிய நிலையில் பாசிஸ்ட்டுகள் அவர்களை மிக எளிதாகத் தூண்டிவிட்டு, தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடுகிறார்கள்.**

■ அய்ஜாஸ் அகமது கட்டுரையிலிருந்து

வகுப்புவாதம், மதச்சார்பின்மை, தேசியம் அல்லது தேசியவாதம் போன்றவை குறித்து நாம் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறோம்? இது தொடர்பாக ஏன் அடிப்படை நிலைப்பாட்டை மிகவும் கடுமையான வார்த்தைகளுடனேயே தொடங்கிட விரும்புகிறேன்.

அனைத்துவிதமான வகுப்புவாதங்களும் ஓர் ஆரோக்கியமான அரசியலில் தீர்க்கப்பட முடியாத நோயல்ல. வகுப்புவாத வெறி உணர்வுகளுக்கு எதிராக அதைவிட அதிகமான அளவில் மதச்சார்பின்மை, நாட்டுப்பற்று உணர்ச்சிகளைக் கொடுப்பதன் மூலம் இந்நோயைக் குணப்படுத்திட முடியும். வகுப்புவாத நடவடிக்கைகள் என்று நாம் அழைத்திடும் - தற்போது மக்கள் பின்பற்றி வரும் - சில நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் மிகவும் சிக்கலான வரலாற்று வேர்களைக் கொண்டிருக்கின்றன. சமூகத்தின் கட்டமைப்பிலும், நாள்தோறும் நாம் பின்பற்றும் நடைமுறை அரசியலிலும் நன்கு ஆழமாக வேரூன்றி இருக்கின்றன.

நாம் பின்பற்றிவரும் தத்துவங்களை விமர்சனத்திற்குள்ளாக்குவது சந்தேகமற மிகவும் முக்கியமானதுதான். ஆனால், எண்ணற்றோர் உயிர்கள் சூறையாடப்படுவதற்குக் காரணமாக விளங்கும் வகுப்புவாத வன்முறை சம்பந்தமான உண்மைகளையும்,விவரங்களையும் திரட்டுவது அதைவிட மிகவும் முக்கியமானதாகும்.

அதுமட்டுமல்ல, வகுப்புவாத சிந்தனைகளும் நடைமுறைகளும் மிகவும் போற்றுதலுக்குரியவை என்றும், இவை நியாயமானவை மட்டுமல்ல, அவசியமானவையும், பயனளிக்கக் கூடியதும் என்றும் நாட்டில் உள்ள மக்களில் மிகப் பெரும்பாலானோர் நம்பிக்கொண்டும் இருக்கிறார்களே, இவர்களின் நம்பிக்கைகளை இவர்கள் மனம் கோணாதவாறு எவ்வாறு விமர்சிக்கப் போகிறோம் என்பது குறித்தும் நாம் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

குஜராத் மாநிலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்ட நரேந்திர மோடி பா.ஜ.க. சார்பில் இந்தியாவின் பிரதம வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டிருக்கிறார். மதவெறி உணர்ச்சியை மக்கள் மத்தியில் கிளப்பி விசிறிவிடுவதன் மூலம் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்பதற்குச் சரியான அடையாளம் நரேந்திர மோடி என்று நான் துணிந்து கூறுவேன்.

தோழர் ரோசா லுக்சம்பர்க் ஒரு முறை கூறுகையில், முதலாளித்துவம், சோசலிசத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்றும் மாறாக காட்டுமிராண்டித் தனத்திற்கும் கூட இட்டுச் செல்லலாம் என்றும் சொன்னார்.

இனரீதியாக கொடுமைகளுக்கு ஆளாகி மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள மக்கள்,தங்கள் சொத்து, சுகங்களை மட்டுமல்ல, தங்கள் அறநெறிப் பண்புகளையும் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய் இருக்கக்கூடிய நிலையில் பாசிஸ்ட்டுகள் அவர்களை மிக எளிதாகத் தூண்டிவிட்டு, தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடுகிறார்கள்.

"பாசிசம்" தலைதூக்குவது என்பது புரட்சியை நம்மால் கொண்டு வர முடியாமல் நாம் தோல்வி கண்டதற்கான தண்டனை என்று கிளாரா ஜெட்கின் கூறினார். அது மிகவும் சரியான கூற்று என்பதை வரலாறு மெய்ப்பித்திருக்கிறது.

முதற்கண் வகுப்புவாதம், மதச் சார்பின்மை மற்றும் தேசியவாதம் என்று நாம் அடிக்கடி பயன்படுத்தும் மூன்று முக்கிய சொற்றொடர்கள் குறித்து ஆய்வு செய்திடுவோம்.

வகுப்புவாதம் (Communalism), மதச் சார்பின்மை (Secularism) மற்றும் தேசியவாதம் (Nationalism) ஆகிய சொற்றொடர்களுக்கு ஆங்கில அகராதியில் இருக்கும் அர்த்தத்தில் நம் நாட்டில் அவை உபயோகப்படுத்தப்படுவதில்லை. குறிப்பாக வகுப்புவாதம் என்ற சொல் நம் நாட்டில் ஓர் இனம் அல்லது ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் மற்ற இன்த்தினர் மீது அல்லது மற்ற மதத்தைச் சார்ந்தவர்கள் மீது வெறுப்பை உமிழக்கூடிய சித்தாந்தத்தைப் பிரயோகிப்பதற்கும், வன்முறையை ஏவுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. அதாவது ஒருவகையிலான பாசிச வடிவத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

முஸ்லிமாக இருக்கும் ஒருவரால் தன்னுடைய மத அடையாளத்தைத் துறந்து, சிந்தனை செய்வது சாத்தியமா? வீரஞ்செறிந்த அளப்பரிய துணிவுள்ள ஒருசிலருக்கு வேண்டுமானால் அது சாத்தியமாக இருக்கலாம், ஆனால் பெரும்பான்மை முஸ்லிம்களுக்கு அது சாத்தியமல்ல என்றே தோன்றுகிறது.

அடுத்து, "இந்து சமூகத்தினர்" என்றும் "முஸ்லிம் சமூகத்தினர்" என்றும் கூறுவதுகூட கற்பனையான ஒன்று என்றே நான் கருதுகிறேன். ஒருசில மதம் சார்ந்த சடங்கு சம்பிரதாயங்களைத் தவிரகாஷ்மீரில் உள்ள முஸ்லிம்களும் கேரளாவில் உள்ள முஸ்லிம்களும் தங்களுக்கு இடையே உறவுகளைப் பகிர்ந்து கொள்வார்களா என்பது சந்தேகமே.

அதேபோன்றுதான் நாகாலாந்தில்உள்ள கிறித்துவர்களுக்கும், கேரளாவில் உள்ள கிறித்துவர்களுக்கும் இடையே உள்ள உறவுமாகும். அதே போன்றதுதான் இந்தியா முழுதும் உள்ளஇந்துக்களும் தங்கள் பிராந்தியங்கள், சாதிகள், தொழில்களைக் கடந்து ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்று நினைப்பதும் மிகவும் அபத்தமான ஒன்றேயாகும்.

**"இந்து சமூகத்தினர்" என்றும் "முஸ்லிம் சமூகத்தினர்" என்றும் கூறுவதுகூட கற்பனையான ஒன்று என்றே நான் கருதுகிறேன். ஒருசில மதம்சார்ந்த சடங்கு சம்பிரதாயங்களைத் தவிர காஷ்மீரில் உள்ள முஸ்லிம்களும் கேரளாவில் உள்ள முஸ்லிம்களும் தங்களுக்கு இடையே உறவுகளைப் பகிர்ந்து கொள்வார்களா என்பது சந்தேகமே. அதேபோன்றுதான் இந்தியா முழுதும் உள்ள இந்துக்களும் தங்கள் பிராந்தியங்கள், சாதிகள், தொழில்களைக் கடந்து ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்று நினைப்பதும் மிகவும் அபத்தமான ஒன்றேயாகும்.**

ஆயினும், நம்முடைய அரசியல் பிரசாரங்கள் அனைத்திலும், நாடு முழுவதுமுள்ள மதச் சமூகத்தினர் அனைவரும் ஒரேமாதிரிதான் என்கிறமுறையிலேயே நம்முடைய அரசியல் பிரசாரங்களும், கொள்கைகளும் உருவாக்கப்படுகின்றன. இத்தகைய கற்பனையான அடையாளம், உண்மையான சமூகத்தினர் மீது அனைத்து மதங்களைச் சார்ந்த சுயநல அரசியல் வாதிகளாலும் மேலிருந்து திணிக்கப்படுகின்றன.அரசுகளும், முந்தைய காலனிய அரசு விரும்பியதைப்போலவே, வர்க்க அரசியலுக்குப் பதிலாக இத்தகைய இனம் சார்ந்த பிரதிநிதிகளையே விரும்புகின்றன.

இம்மூன்று சொற்களிலும் மிகவும் கடினமான வார்த்தை தேசியவாதம் என்னும் சொல்தான்.

தேசியவாத சித்தாந்தம் என்பது அடிப்படையில் தேசிய-அரசு (Nation-State) வடிவத்தைக் குறிக்கோளாகக்கொண்டு இணைக்கப்பட்டதாகும். தேசிய-அரசு என்ற வடிவம் இருக்கும் வரை, ஏதாவது ஒரு வகையிலான தேசியவாதம் ஒரு மெய்யான அவசியமாகும். நாஜி ஜேர்மனியின் பாசிஸ்ட் தேசியவாதம், அமெரிக்காவின் ஏகாதிபத்திய தேசியவாதம், வியட்நாம் அல்லது அங்கோலா போன்ற நாடுகளில் விடுதலை இயக்கங்களுக்குத் தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட்டுகளின் புரட்சிகர தேசியவாதம், மதச்சார்பற்ற அரசு தேசியவாதம், ஈரான் நாட்டின் சமயகுருமார்களின் தேசியவாதம் என்று எண்ணற்ற தேசியவாதங்கள்.

எங்கெல்லாம் தேசியவாதங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் தேசியவாதம் குறித்த பொருள் குறித்தும் எண்ணற்ற சண்டை சச்சரவுகளும் உண்டு. தேசியவாதத்தின் ஒரு வகை,மற்றோர் வகையால் தோற்கடிக்கப்பட்டு, மாற்றியமைக்கப்படுவதும் ஒரே நாட்டில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இப்போதெல்லாம், உலகில் பலநாடுகளில், நாட்டின் குணாம்சத்தை வடிவமைப்பதில் அந்நாட்டில் பெரும்பான்மையாகவுள்ள மதத்தையும் இணைத்துக் கொள்வது என்பதும் புதுப்பாணியாக மாறி இருக்கிறது.யூத சமயத்தை ஒரு நாட்டினர் தூக்கிப் பிடிக்கிறார்கள் என்றால், சில நாடுகளில் இஸ்லாமை தூக்கிப் பிடிக்கிறார்கள், இங்கே இந்துயிசத்தைத் தூக்கிப் பிடிக்கிறார்கள். வேறொரு நாட்டில் கத்தோலிக்கத்தைத் தூக்கிப் பிடிக்கிறார்கள்.

நவீன தாராளமய கட்டத்தில், நாட்டில் தொழிலாளர் வர்க்கச் சேனையைவிட வேலையில்லாத இளைஞர்களின் சேனை மிகவும் பெரிதாக இருக்கிறது. இத்தகு நிலையில் சமூகத்தில் ஒரு முறையான தொழிலாளர் வர்க்கக் கலாசாரத்தை நிறுவுவது என்பது மிகவும் சிரமம். தொழிலாளர் வர்க்கத்திற்குள்ளேயே கூட உதிரிப் பாட்டாளிகளை உருவாக்கும் வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. முறையான ஊதியம் கிடையாது, எந்த நிமிடமும் வேலைன்யவிட்டு விரட்டி அடிக்கப்படலாம் என்ற நிலை. எல்லாவற்றையும் விட மோசம், வேலையில்லாதோர் பட்டாளம் மிகவும் பெரிது, நிரந்தரமானது.

ஆக்கபூர்வமான உழைப்பில் ஈடுபட்டிருப்பவரின் நிலையான வாழ்க்கை ஒருவருக்கு மதிப்பையும் மரியாதையையும் அளிக்கிறது அல்லது குறைந்தபட்சம் வாழ்வதற்கான அடிப்படை ஆதாரத்தை அளிக்கிறது. அவ்வாறு ஆக்கபூர்வமான உழைப்பில் ஈடுபடாதவர்களின் நிலை? காலப்போக்கில் மற்றவர்களைத் துன்புறுத்துவதைப் பற்றிக் கிஞ்சிற்றும் பொருட்படுத்தாது கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இத்தகைய நபர்களை வகுப்புவாதம் தன்னுடைய வன்முறைச் செயல்களுக்கு நன்கு பயன்படுத்திக் கொள்கிறது.

ஆக்கபூர்வமான உற்பத்தியில் ஈடுபட்டிருப்போர் வாழ்க்கை என்பது அவரைப் போலவே ஆக்கபூர்வமான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மற்றவர்களோடும் இணைந்து ஓர் இனமாக, ஒரு சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் உதிரிப்பாட்டாளிகள் என்று சொல்லப்படுகிற ரவுடிகள், கிரிமினல்கள், திருடர்கள், பொறுக்கிகள் மற்றும் இதுபோன்று சமுதாயத்திற்குக் கேடு பயக்கும் தொழில்களில் ஈடுபட்டிருப்போர் வாழ்க்கை என்பது இயற்கையாகவே குறிப்பிட்ட குணாம்சங்களுடன் கூடிய எவ்விதமான இனத்தையும் உருவாக்குவதில்லை, தற்காலிகமாக சேர்ந்து கொள்வார்கள், வேலை முடிந்தபின் கலைந்து சென்று விடுவார்கள். தொழிலாளர் வர்க்கக் குணம் பறிக்கப்பட்ட இவர்கள், சாதி, மதம், இனம் அல்லது வேறு எந்த விதத்திலாவது வெறியூட்டப்பட்டால் அதற்கு மிக எளிதாக மயங்கிவிடுவார்கள். வகுப்புவாத அரசியல் இத்தகைய உதிரிப் பாட்டாளிகளுக்கு வெகுவாகவே தீனி போடுகிறது.

வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டம் என்பது மதச்சார்பின்மைக்கு ஆதரவான தத்துவார்த்த போராட்டம் மட்டுமல்ல, முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியுமாகும். சுருக்கமாகச் சொல்வதென்றால், வகுப்புவாதத்திற்கு (Communalism) மாற்று, கம்யூனிசம் (Communism) அல்லது சோசலிசம்தான். இன்றைய தினம் நாட்டில் வகுப்புவாத சிந்தனைகள் மிகப்பெரிய அளவில் ஊட்டி வளர்க்கப்படுவதை முறியடிக்கக் கூடிய விதத்தில் மதச்சார்பின்மையையும் கம்யூனிஸ்ட்களின் குணங்களில் ஒன்றாக முன்னெடுத்துச் சென்றிட வேண்டும். ●

## வாகன விபத்துக்களால் 2013 இல் 2225 பேர் மரணம்

(கொழும்பு)

வாகன விபத்துக்கள் காரணமாக 2013 ஆம் ஆண்டு 2,225 பேர் உயிரிழந்துள்ளனர். 38,107 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் வாகன விபத்துக்கள் 7 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளன.

அத்துடன் வாகன விபத்துக்களால் சுமார் 20,000 பேர் காயமடைந்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவதனால் அதிகளவானவர்கள் பாதிக்கப்படுகின்றன. மதுபோதையில் வாகனம் செலுத்தியமையால் ஏற்பட்ட விபத்துக்களில் 2012 ஆம் ஆண்டு 111 பேரும், 2013 இல் 92 பேரும் உயிரிழந்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கண்டறிவதற்கு பண்டிகைக் காலத்தில் பொலிஸாரால் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த 05 தினங்களாக முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 1,500 இற்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை எதிர்வரும 05 ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும தெரிவித்துள்ளார்.

## மனித உரிமை முன்னேற்றமே சர்வதேச அழுத்தத்தை தடுக்கும்

(கொழும்பு)

மனித உரிமை நிலைமையில் முன்னேற்றத்தை வெளிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்ப முடியாது என ஜே.வி.பி.யின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பாக மற்றுமொரு பிரேரணை கொண்டு வரப்படும் ஆபத்துள்ள நிலையில் அரசாங்கமோ யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களை ஆற்றாமல் மேலும் காயங்களை உருவாக்கவே முயற்சித்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக புதிய யோசனை வரலாம் என்ற அச்சம் காணப்படுகின்றது.

அமெரிக்கத்தரப்பில் இவ்வாறு எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வாறான நிலைமை ஒன்றை அரசாங்கமே உருவாக்கிக் கொண்டு வருகின்றது.

நாட்டில் மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தி யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தால் சர்வதேச அழுத்தங்களைத் தடுத்திருக்கலாம்.

ஆனால், அரசாங்கம் மனித உரிமை நிலைமையை மேம்படுத்துவதிலோ காயங்களை ஆற்றுவதிலோ முன்னேற்றத்தைக் காட்டவில்லை. மாறாக யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்குப் பதிலாக புதிதாக காயங்களை உருவாக்கிக் கொண்டு வருகின்றது.

அந்தவகையில் பார்க்கும் போது இவ்வாறானதொரு நிலைமையை அரசாங்கமே உருவாக்கிக் கொண்டுள்ளது என்று கூறலாம். நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை. மனிதஉரிமை மீறல்கள் விடயத்தில் முன்னேற்றம் ஏற்படுத்தப்படவில்லை.



எனவே, சர்வதேச அழுத்தங்கள் வருவதற்கான அனர்த்தம் அதிகமாகவே காணப்படுகின்றது. எப்படியிருப்பினும் எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் நாட்டின் மனித உரிமை நிலைமையில் முன்னேற்றத்தை வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தால் சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிக்க முடியும்.

ஆனால் அரசாங்கம் அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. என்றார்.

## மங்களசமரவீரவின் வீட்டிற்குள் புகுந்த கள்வர்

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் வீட்டுக்குள் கள்வர் புகுந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாணந்துறை கெசல்வத்த என்னும் இடத்தில் அமைந்துள்ள வீட்டிற்குள் கள்வர் புகுந்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கள்வர்கள் எதனையும் வீட்டிலிருந்து எடுத்துச் செல்லவில்லை எனவும் ஆவணங்களைத் தேடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை பொலிஸார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

## முறைப்பாடுகளைத் தீர்க்க விசேட குழு நியமனம்

முறைப்பாடுகளைத் தீர்ப்பதன் பொருட்டு ஜனவரி மாதம் விசேட குழு வொன்று அமைக்கப்படும் என்று புவி சரிதவியல் மற்றும் அகழ்வாராச்சி நிறுவகத்தின் தலைவர் செனரத்த ஜயசுந்தர இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான முறைப்படுகள் கிடைக்கப்பெற்ற நிலையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

2011ஆம் மற்றும் 2012 ஆண்டு காலப்பகுதிகளில் ஆயிரத்து 400 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனினும் எம்மால் 50 முறைப்பாடுகள் தொடர்பிலேயே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு அதிகமான முறைபாடுகள் கிடைக்கப்பெறுவதற்கு காரணம் ஒரே விடயங்கள் தொடர்பில் நூற்றுக்கணக்கானோர் முறையிடுவதாகும்.

எவ்வாறாயினும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஜனவரி மாதம் தொடக்கம் விசேட குழு வொன்றை இணைத்துக் கொள்ள நாங்கள் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை; புதிய மாதிரிவினாத்தாள் ஜனவரியில் வெளியீடு



கல்விச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமையத் தயாரிக்கப்படும் 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாளை எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் பரீட்சைத் திணைக்களம் வெளியிடும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

வருடம்தோறும் ஓகஸ்ட் மாதம் நடாத்தப்படும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 2014 இலும் நடாத்தப்படும். எனினும் வழமையான வினாத்தாள் போன்றல்லாது மாணவர்களுக்கு மிகவும் இலகுவாக்கப்பட்ட வினாத்தாளாக அது அமையும்.

இந்தப் பரீட்சைக்கு மாணவர்கள் ஆயத்தமாகும் விதத்தில் பரீட்சைத் திணைக்களம் வினாத்தாள் தயாரிப்புக் குழுவுடன் இணைந்து ஆணைக்குழு வழங்கியுள்ள பரிந்துரைகளுக்கமைவான மாதிரி வினாத்தாள் ஒன்றைத் தயாரிக்கும் இந்த மாதிரி வினாத்தாள் ஜனவரி மாத இறுதியில் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு பாடத்திட்டத்தை தயாரித்து மாணவர்களை பரீட்சைக்கு தயார்ப்படுத்த முடியும என்றார்.

இதேபோன்று 2015 ஆம் ஆணடும் புலமைப்பரிசில் நடாத்தப்பட்டதன் பின்னர் 2016ஆம் ஆண்டு முதல் வருட இறுதி பரீட்சையாக புலமைப்பரிசில் பரீட்சையை நடாத்துவதற்கான இறுதி பரிந்துரைகளை ஆணைக்குழு வழங்கும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவிக்கையில், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் புலமைப்பரிசில் நடாத்துவது தொடர்பாகவும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை உள்ளடக்குவது தொடர்பாகவும் ஆணைக் குழு பிரதிநிதிகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்துக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் 2016ஆம் ஆண்டாகும் போது பௌதிகவளம், மற்றும் மனிதவளங்கள் நிறைந்த மகிந்தோதய இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000 வெற்றிகரமாக அபிவிருத்தி செய்யப்பட்டு விட்டால் 2015 இன் பின்னரும் இந்தப் புலமைப்பரிசில் பரீட்சை நடாத்த வேண்டுமா? என்பதை கல்விச்சேவைகள் ஆணைக்குழு தீர்மானிக்கும்.

இருப்பினும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவித் தொகை வழங்குவதற்காக பரீட்சைகள் நடாத்துவது தொடர்பான புதிய பரிந்துரைகளையும் ஆணைக் குழு வழங்கும் என்றார்.

## பதவி ஆசை இல்லை



மாகாண சபை உறுப்பினராகவோ நாடாளுமன்ற உறுப்பினராகவோ ஆகவேண்டும் என்று தமக்கு எந்தவிதமான ஆசையும் இல்லை என்று ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே. டி லால் காந்த தெரிவித்துள்ளார்.

மொரட்டுவயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமக்கு மாகாண சபை உறுப்பினராக இருப்பதற்கு எனக்கு எந்த தனிப்பட்ட ஆசையும் கிடையாது. நான அமைச்சராகவும் இருந்துள்ளேன்.

தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொண்டு மக்களுடன் இணைந்திருக்கவே நான் ஆசைப்படுகிறேன். என்றார்.

## இத்தாலி பலேர்மோ நகரில் அதிகளவில் வசிக்கும் இலங்கையர்

(இத்தாலி)

இத்தாலி பலேர்மோ நகரில் இலங்கையரே அதிகளவில் ஆதிக்கம் செலுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய ஆண்டுகளை விட தற்போது புலம்பெயர் இலங்கையர்களின் எண்ணிக்கை பலேர்மோ நகரில் அதிகரித்துள்ளதாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த நகரின் உள்ளூர் நகராட்சி அறிக்கையின்படி, கிட்டத்தட்ட 30 ஆயிரம் இலங்கையர்கள் பலேர்மோ நகரில் குடியேறியுள்ளனர். 2012ஆம் ஆண்டு இறுதிவரை, 17.1 வீதமான இலங்கையர்கள் குறித்த நகரில் வாழ்ந்து வருகின்றனர். இது 2011ஆம் ஆண்டைவிட 2 வீதம் அதிகரித்துள்ளதாக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலேர்மோ நகரில் குடியேறியவர்களில் இரண்டாம் இடத்தை பங்களாதேசத்தைச் சேர்ந்தவர்கள் பிடித்துள்ளனர்.

இவர்கள் 16.4 வீதமாக உள்ளனர். மேலும், ருமேனியர்கள் 10.9 வீதம், கானான் நாட்டவர் 7.8 வீதம், துனிசியா 6.1 வீதம், பிலிப்பைன்ஸ் 5.7 வீதம், மொராக்கோ 5.1 வீதம் சீனர்கள் 4 வீதம் பலேர்மோ நகரில் வாழ்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குற்றச்சாட்டுக்கு மறுப்பு: வழக்குத் தொடர நடவடிக்கை



தற்கொலைத் தாக்குதல் நடாத்த வந்த பெண்ணுக்கும் எனக்கும் கள்ளத் தொடர்பு இருந்ததாக பிரதியமைச்சர் சரண குணவர்தன சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிராக வழக்குத் தொடராமல் இருக்க வேண்டுமாயின், 14 நாட்களுக்குள் 500 மில்லியன் ரூபாவை செலுத்துமாறு கோரி சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

பிரதியமைச்சர் சரண குணவர்தனவுக்கு கடந்த 19 ஆம் திகதி சட்டத்தரணி ஊடாக வழக்கு தொடரப் போவதாகக் கடிதம் அனுப்பியுள்ளோம்.

முன்னாள் இராணுவ தளபதியான தனக்கு ஏற்படுத்திய அவதூறுக்கு இழப்பீடாக 500 மில்லியன் ரூபாவை வழங்க வேண்டும் என அதில் கேட்டுள்ளோம். எனக்கு ஏற்படுத்திய அவதூறுக்கு தொகையை நிர்ணயம் செய்ய முடியாது எனினும் பிரதியமைச்சருக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்க வேண்டும என்பதால் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

என் மீது தற்கொலை தாக்குதல் நடாத்த வந்த பெண்ணுடன் எனக்குத் தொடர்பு இருந்தது எனக் கூறி, பிரதியமைச்சர் எனக்கு மட்டுமல்ல, முழு இராணுவத்திற்கும் கறையை ஏற்படுத்தியுள்ளார் என்றார்.

# கூட்டுறவாளர்களின் சம்பள அதிகரிப்பிற்கு சட்டத்தில் திருத்தம் விரைவில் ஏற்படும்



கூட்டுறவுத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு வழங்கப்படுகின்ற வேதனம் மிகக் குறைவானதே. இதனைக் கருத்தில் எடுத்தே கூட்டுறவு ஆணைக்குழுவின் செயலாளரிடம் கூட்டுறவு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியிருந்தேன்.

அதற்கமைவாக இயக்குநர் சபைகள் தாங்களாகவே தீர்மானங்களை எடுத்து பணியாளர்களுக்கு சம்பளத்தை அதிகரித்து கொடுப்பதற்குரிய அதிகாரத்தை வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்களை கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதாக ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுவின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் 2013 ஆண்டு ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 29ஆம் திகதி இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தற்போது வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்கள் நெருக்கடியான யுத்த காலத்தில் மக்களுக்கு பெரும் சேவையினை ஆற்றியி ருக்கின்றார்கள். யுத்தகாலத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தான் மக்களுக்கு உரிய உணவு விநியோகம் முதல் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது வரை பெரும் பங்காற்றியுள்ளனர்.

தற்போது போட்டித் தன்மை அதிகரித்துள்ளது. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் நிறுவனங்களுடன் போட்டி போட வேண்டும். கூட்டுறவுத்துறையை வளர்ப்பதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

கூட்டுறவுத்துறை என்பது பணியாளர்களுக்கு சம்பளத்தை மட்டும் கொடுக்கும் நிறுவனம் அல்ல, பல்வேறு மக்கள் அபிவிருத்திப் பணி செயற்றிட்டங்களிலும் பங்காளிகளாக இருக்கின்ற அமைப்பாகவும் காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்

கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் விஜயசேகரம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஈ.பி.டி.பி வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன, கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தவராஜா, சங்கத்தின் பொது முகாமையாளர் பாலேந்திரன், கிளிநொச்சி பொலிஸ் பொறுப்பதிகாரி விக்கிரமசிங்க, சங்கத்தின் உப தலைவர் விக்கினராஜா மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பரமர் சங்கமம்



'புது விளக்குமாறு நல்லாக் கூட்டும்' என்பினம். கூட்டுவது ஏதோ நாங்கள்தான். அது கருவியாக மட்டும் செயறபடுவதான். புதுவருசமும் இண்டைக்கு பிறந்துள்ளது. 2013ஆம் ஆண்டு எங்களை விட்டுப்போக 2014ஆம் ஆண்டு எங்களோடை உறவாட வந்திட்டுது.

ஒரு ஆண்டின் முடிவில் அவ்வாண்டில் எங்களுக்கு ஏற்பட்ட என்னென்ன திண்மைகளை அசை போடுவது வழக்கமாகவே உள்ளது. பத்திரிகைகள் நிகழ்ந்த வருடத்தில் முக்கிய சம்பவங்களைத் தொகுத்து சிறப்பு இதழ்களை வெளியிடும். அத்தகைய இதழ்களைப் பக்குவப் படுத்தி வைத்திருப்பது படிக்கும் மாணவர்களில் இருந்து படைக்கும் படைப்பாளிகள் வரைக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

'ஆண்டொன்று போனால் வயதொன்று போகும் அதற்கு முன்னாலே வா... வா...!' என்று இளமைக்கு அழைப்பு விட்டான் ஒருகவிஞன். இளமையில் கல் என்பது ஔவைப்பிராட்டியின் கூற்று. இளமையிலும் சரி, முதுமையிலும் சரி நேரங்களை வீணாக்கக் கூடாதென்பது மற்றொரு புத்திமதி.

எனக்குத் தெரிஞ்ச பழம்பெரும் நம்நாட்டு எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் விடாமுயற்சி உடைய எழுத்தாளர். இறுதிக் காலத்தில் பரிஸில் வாழ்ந்து அங்கேயே காலமானார். அவர் இலங்கையில் வாழும் காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் பதினைந்து சிறுகதைகள், மூன்று நாவல்கள், ஐந்து குறுநாவல்கள், பத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுத வேண்டுமென திட்டமிட்டு அவ்வாறே எழுதியும் வந்தார்.

அதனால் அவர் ஈழத்தமிழ் இலக்கியத்தில் பெயர் பெற்றவராகத் திகழ்ந்தார். அவ்விதம் ஒவ்வொரு புதுவருடங்களும் பிறக்கேக்கை அந்த வருசத்தில் என்னென்ன கருமங்களை நாங்கள் செய்து முடிக்க வேணுமெண்டு திட்டமிடல் எல்லாருக்கும் நல்லது தானே!

'புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவன காலநியதி' என்பதற்கேற்ப எங்களில் அதிகமானவர்கள் புதிய புதிய உணவுகள், ஆடையணிகள், நகை நட்டுக்கள் என்பவற்றைக் கொள்வதும், கழிப்பதுமாக இருப்பதைப் பார்க்கிறோம்.

அதுக்காக அவற்றை எல்லாம் தள்ளி வைக்க வேணுமெண்டது அர்த்தமல்ல. அடிப்படையான உணவு, உறைவிடம், உயிர்வாழ அத்தியாவசியமான தேவைகள் அவை. சுவர் இருந்தாத்தான் சித்திரம் வரையலாம் எண்ட சிந்தனையும் வந்து போகிறது.

சிறு வயது முதல் முதுமை வயது வரை மனிதனாகப் பிறந்தவன் நேரங்களை வீணடிக்காமல் ஆக்கத்துக்குரியதாக செலவழிப்பதை புத்தாண்டு பிறந்திருக்கும் இவ்வேளை மனதில் நிறுத்திக்கொண்டால் இந்த ஆண்டில் எங்களாலான நன்மைகளை நாட்டுக்குவழங்குவதன் மூலமாக அனைத்து மக்களுக்கும் செய்யலாமல்லவா?

புது விளக்குமாறு நல்லாகக் கூட்டும் என்பதுக்கேற்ப புது வருடச் சிந்தனைகளும் நல்லா இருக்க வேணும் இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# நியமனம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்டக் காரியாலயத்திற்கு புதிய உதவிப்பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக வெற்றிடமாக இருந்த இப்பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறு யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனமும், மாவட்டக் காரியாலயமும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர்சேவை அதிகாரியாகக் கடமையாற்றி வந்த ஐ.தபேந்திரன் பதவி உயர்வுடன் உதவிப் பணிப்பாளராக யாழ். மாவட்டத்திற்கு நியமிக்கப்பட் டுள்ளார்.

இந்த நியமனமானது இன்று அமுலுக்கு வருகின்றது. புதிதாக பதவியேற்கவுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐ.தபேந்திரனை வரவேற்கும் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை மு.ப.10 மணியளவில் கச்சேரி கிழக்கு ஒழுங்கைப் பகுதியிலுள்ள மாவட்டக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (48)

# கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்திரபுரம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவாளர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

சந்திரபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சந்திரபுரம் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுக்கிளையில் பால் கொடுத்தவர்கள், பால் கொடுக்காதவர்கள், பால் வழங்க விரும்புவர்கள் அனைவரையும் தவறாது குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறு கிளையின் உபதலைவர் வ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (இ)

# கற்றல் உபகரணம் வழங்கல்



(மானிப்பாய்)

நலன் விரும்பி ஒருவரின் பிறந்த நாளை முன்னிட்டு அன்பளிப்புச் செய்யப்பட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை இளவாலை வசந்தபுரம் பகுதியில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் 35 மாணவர்களுக்கான அடுத்தாண்டுக்கான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

நிகழ்வில் சுன்னாகம் றோட்டரக்ட் கழகத் தலைவர் ஸ்ரீரங்கநாயகி, நிகழ்சித்திட்ட இணைப்பாளர் சுபோதினி, சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் உஷாந்தன், J/222 பகுதி கிராமசேவகர் அன்ரனிறோய், அப்பகுதியின் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தயாபரன், திருச்செல்வி, பெற்றோர், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய சுன்னாகம் றோட்டரக்ட் கழகத் தலைவர் ஸ்ரீரங்கநாயகி, கிடைக்கின்ற உதவிகளை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்தி கற்றலில் முன்னேற வேண்டும். இவ்வாறான நல்ல சிந்தனைகள் வரவேற்கப்படவேண்டியவை. இதனூடாக இழந்த கல்வித்தரத்தைப் மீளப் பெறமுடியும் என்றார். (48)

# முரசின் இன்றைய பலன்



(01.01.2014 புதன்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 17 ஆம் திகதி.
மரணயோகம்/அமாவாசை. மூல சத்திரம் மு.ப 11.46 வரை.
பின் பூராடம்.
இராகுகாலம் 12.29 - 01.59 வரை. சுபநேரம் 04.59 - 06.29 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தனியார் துறைத்தொழிலைக் கைவிட்டு அரசுப்பணியில் சேர முஸ்தீபு, தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சிக்கல்களில் தக்க வைக்கப் படுவீர்கள். |
| ரிஷபம் | புதிய மனை அமைக்க வெளியூர் மக்கள் உதவ முன்வரல், துணிச்சலுடன் முடிவுகளை எடுத்ததைப் பாராட்டி கௌரவப்படுத்துவர். |
| மிதுனம் | விவாகமுயற்சி இழுபடுவதினால் பெற்றோருடன் பிள்ளைகள் வாக்குவாதப்படல், உணவுக்கட்டுப்பாட்டை அலட்சியப்படுத்தியதனால் நோய் மீண்டும் தலை தூக்கல். |
| கடகம் | அதிகார பூர்வமாகச் செயற்படுவதினால் பணிகளை முடித்து வைத்தல், உதவுவதாகக் கூறியவர்கள் பொறுத்தநேரத்தில் பின்வாங்கி கவலையைத்தரல். |
| சிம்மம் | முன் கூட்டியே திட்டமிட்ட பணிகளை முடிப்பதற்கு முயற்சித்தல், இரகசியத்தை வெளியிடாது காப்பாற்றியததால் முரண்பாடு விலகுதல். |
| கன்னி | பயணமுகவரிடமிருந்து பணத்தைப் பெற பிரயாணம் மேற்கொள்ளல், தம்பதியர் மத்தியில் நிலவிய பிணக்கு மறைந்து சுமுகநிலை உருவாதல். |
| துலாம் | மனதை வருத்திய நெடுநாள் பிரச்சினை சுமுகமாக முடிதல்; அரசுப்பணியில் சக ஊழியர்களைப் பாராட்டி ஊக்கமளித்தல். |
| விருச்சிகம் | ஏழரைச் சனி நிலவுவதால் புதிய முயற்சிகள் தொடங்கபின்னடித்தல், நோயின் உபாதை நீங்க தெய்வ தலத்தை நாடிச்செல்லல். |
| தனுசு | சக ஊழியர்களின் ஒத்துழைப்பினால் பணிச்சுமை இனிதே முடிதல், எதிர்பாராது வருகை தந்த வெளியூர் உறவினர்களால் ஆனந்தமடைதல். |
| மகரம் | செய்த நன்றியை மறந்த உறவினர் பற்றி மனக் கிலேசமடைதல், எவருக்கும் சிபார்சு செய்வதைக் கை விட்டு விடுங்கள். |
| கும்பம் | பரீட்சை முடிவினால் உயர் கல்விகற்க சந்தர்ப்பம் ஏற்படல், பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் வெளியூர் செல்ல வாய்ப்புக்கிட்டுதல். |
| மீனம் | உண்மையை விளம்பியதால் மனதில் தேங்கியிருந்த கவலை அற்றுப்போதல், வெளியூர் பயணம் பற்றிய தீர்க்கமான முடிவினை எடுக்காது பதகளிப் படைதல். |

# சாதனைக்காக ஒருபோதும் ஆடியதில்லை

## டெஸ்டில் விடைபெற்ற கலிஸ்



(டேர்பன்)

அணியின் வெற்றிக்காக மட்டுமே விளையாடினேன். தனிப்பட்ட சாதனைகளுக்காக ஒருபோதும் நான் ஆடியதில்லை என டெஸ்ட் போட்டிகளிலிருந்து விடைபெற்ற தென்னாபிரிக்க வீரர் கலிஸ் தெரிவித்துள்ளார்.


சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 18 ஆண்டுகள் விளையாடிய கலிஸ், டேர்பன் போட்டியுடன், டெஸ்ட் அரங்கில் இருந்து விடைபெறுவதாகத் தெரிவித்திருந்தார். இவருக்கு வெற்றியுடன் விடைகொடுப்போம் என தென்னாபிரிக்க வீரர்கள் கூறினர். சொல்லி வைத்தாற் போல, இந்த டெஸ்டில் இந்திய அணி தோல்விடைய, டெஸ்ட் அரங்கில் இருந்து வெற்றியுடன் விடைபெற்றார் கலிஸ். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கலிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 18 ஆண்டுகளாக தென்னாபிரிக்காவுக்காக டெஸ்ட் போட்டியில் விளையாடியது சிறந்த தருணம். சரியான நேரத்தில் ஓய்வு முடிவை எடுத்துள்ளேன். இதுவரை சொந்தச் சாதனைகளுக்காக ஒருபோதும் விளையாடியதில்லை. அணியின் வெற்றிக்காக மட்டுமே விளையாடினேன். டெஸ்ட் அரங்கில் பத்தாயிரம் ஓட்டங்களை கடந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்திய சச்சினின் சாதனைகளை முறியடிப்பது எளிதான காரியமல்ல. வரும் 2015இல் நடைபெறவுள்ள உலக கோப்பை தொடரில் விளையாட விரும்புகிறேன். வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் தென்னாபிரிக்காவுக்கு உலக கோப்பை வென்ற தர முயற்சிப்பேன்.

கடைசி டெஸ்டில் சதம் அடித்தது கூடுதல் சிறப்பு. தென்னாபிரிக்க அணிக்காக சதம் அடிக்க இது தான் கடைசி வாய்ப்பு. கடைசியில் 90 ஓட்டங்களை எட்டியவுடன், வழக்கமான நேரங்களில் இருப்பதை விட, கூடுதல் நெருக்கடி ஏற்பட்டது. கடைசியில் அனுபவத்தை வெளிப்படுத்தி சதம் அடித்துவிட்டேன். இது சிறப்பானது.

என் கிரிக்கெட் வாழ்வில் எனக்கு ஆதரவளித்த பயிற்சியாளர்கள், சக வீரர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு நன்றி. பலருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும் என்றாலும் என் தாய், தந்தை இருவருக்கும் நன்றி தெரிவிப்பது என் கடமை. உங்களைப் பெருமைப்படுத்தியிருப்பேன் என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யுவராஜ் நீக்கம்



(மும்பை)

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு நாள் போட்டியிலிருந்து அதிரடி வீரர் யுவராஜ்சிங் நீக்கப்பட்டுள்ளார்.

இந்த மாதம் நியூசிலாந்து செல்லும் இந்திய அணி, ஐந்து ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. ஒருநாள் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி நேப்பியரில் நடைபெறவுள்ளது. டெஸ்ட் தொடரின் முதல் போட்டி ஓக்லாந்தில் பெப்ரவரி 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இத்தொடரில் பங்கேற்கும் டெஸ்ட், ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணி மும்பையில் உள்ள பி.சி.சி.ஐ., தலைமையகத்தில் நேற்று தேர்வு செய்யப்பட்டது. இதில் மத்திய பிரதேச வேகப்பந்து வீச்சாளர் ஈஸ்வர் பாண்டா டெஸ்ட் அணியில் இடம் பிடித்தார். தவிர, ஒருநாள் அணியில் பாண்டாவுடன், ஸ்ரூவெர்ட் பின்னி, வருண் ஆரோன் ஆகியோரும் வாய்ப்பு பெற்றுள்ளனர்.

டெஸ்ட் அணி விபரம்: டோனி (கப்டன்), தவான், முரளி விஜய், புஜாரா, ஹோலி, ரோகித் சர்மா, ரகானே, ரவீந்திர ஜடேஜா, சகிர்கான், மொகமட் சமி, இசாந்த் சர்மா, அம்பதி ராயுடு, புவனேஷ்வர் குமா அஷ்வின், உமேஷ் யாதவ், சகா, ஈஸ்வர் பாண்டா

ஒரு நாள் அணி விபரம்: டோனி (கப்டன்), தவான், ரோகித் சர்மா, ஹோலி, ராயுடு, சுரேஷ் ரெய்னா, ரகானே, அஸ்வின், ஜடேஜா, புவனேஷ்வர் குமார், ஈஸ்வர் பாண்டா, மொகமட் சமி, மிஸ்ரா, ஸ்ரூவெட் பின்னி, வருண் ஆரோன்.

# இன்று மூன்றாவது ஒரு நாள்

(ஹமில்டன்)

நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்றைய தினம் நியூசிலாந்தின் ஹமில்டனில் நடைபெறவுள்ளது.

நியூசிலாந்திற்கான கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் மோதி வருகின்றது. இதில் முதலிரு போட்டிகள் நிறைவடைந்துள்ளது. முதல் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது. இதில் இரு அணிகளுமே வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள முயற்சிக்கும் என்பதால் இவ் ஆட்டம் பரபரப்பு நிறைந்ததாக இருக்கும் என கிரிக்கெட் விமர்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# ஐ.சி.சி.யின் கௌரவம்

(டுபாய்)

அவுஸ்ரேலிய பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் பொப் சிம்சன், நியூசிலாந்தைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீராங்கனை டீபி ஹொக்லே ஆகியோருக்கு ஹொல் ஒப் பேம் கௌரவத்தை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) வழங்கியுள்ளது.

கிரிக்கெட்டில் வீராங்கனை ஒருவர் இந்த கௌரவத்தைப் பெறுவது இது 4ஆவது முறையாகும். இதற்கு முன்பு அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பெலின்டா கிளார்க், இங்கிலாந்தைச் சேர்ந்த இனித் பேக்வெல் மற்றும் ரொய்ச்சல் ஹேய்கோ ஆகிய வீராங்கனைகள் ஹொல் ஒப் பேம் விருது பெற்றுள்ளனர்.

நியூசிலாந்தில் இதற்கு முன்பு ரிச்சட் ஹட்லீக்கு மட்டும் ஹொல் ஒப் பேம் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. இப்போது டீபி ஹாக்லே இந்த கௌரவத்தைப் பெற்றுள்ளஈர்.

அதேநேரத்தில் இந்த கௌரவத்தைப் பெறும் 20ஆவது அவுஸ்ரேலியர் என்ற பெருமையை பொப் சிம்சன் பெற்றுள்ளார். சிட்னியில் நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் இவர்கள் இருவருக்கும் இந்த கௌரவம் முறைப்படி அளிக்கப்படும் என ஐ.சி.சி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதகமாக அமைந்த இறுதி நாள் தோல்விக்கு அடிப்படைக் காரணம்

## இது டோனியின் விளக்கம்

(டேர்பன்)

டேர்பனில் டெஸ்ட் போட்டியின் இறுதி நாள் ஆட்டம் ஒட்டுமொத்தத்தில் எங்களுக்குப் பாதகமாக அமைந்து விட்டது. இதுவே எங்கள் தோல்விக்கு அடிப்படை என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

5ஆவது நாளில் முதல் பகுதி ஆட்டம் முக்கியமானதாக அமைந்தது. ஆனால் அதை நாங்கள் சரியாக ஆரம்பிக்கவில்லை. சில (நடுவரின்) மோசமான தீர்ப்புகள், கடினமான முடிவுகள், மோசமான ஷொர்ட்டுகள் தோல்வியில் கொண்டு போய் விட்டு விட்டன. ஒட்டுமொத்தத்தில் இந்த இளம் அணியின் செயற்பாடு மகிழ்ச்சி அளிக்கிறது. குறிப்பாக பந்து வீச்சாளர்கள் அபாரமாக பந்து வீசினர். அவர்கள் இந்த தொடரில் இருந்து நிறைய விடயங்களை கற்று இருப்பார்கள். இது எதிர்வரும் நியூசிலாந்துடனான தொடரில் பிரதிபலிக்கும் என்று நம்புகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வெற்றி குறித்து தென்னாபிரிக்க அணி கப்டன் ஸ்மித் கூறுகையில், கலிஸிற்காக இந்த போட்டியில் வெல்ல வேண்டும் என்று விரும்பினோம்.

அதை கடினமாக உழைத்து செய்துள்ளோம். அவரது இடத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது என்றார்.

# மரியா மகிழ்ச்சியா



(பிரிஸ்பேன்)

பிரிஸ்பேன் ஓப்பன் ரென்னிஸ் தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளார் ரஷ்யாவின் மரியா ஷரபோவா. இதன் மூலம் 4 மாத இடைவெளிக்குப் பின் ரென்னிஸ் அரங்கில் புத்துணர்ச்சியுடன் அடியெடுத்து வைத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தொடரின் முதல் சுற்றில் ஷரபோவா, பிரான்ஸின் கரோலின் கார்சியாவை எதிர்த்து ஆடினார். தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய ஷரபோவா 6-3, 6-0 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்றார். ஜனவரியில்

அவுஸ்ரேலிய ஓப்பன் ஆரம்பமாகவுள்ள நிலையில் மீண்டும் ஆட்டத் திறனை அதிகரித்திருப்பது குறித்து ஷரபோவா கூறுகையில், 4 மாத இடைவெளிக்குப் பின் மீண்டும் களம்காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது. எதிர்த்து ஆடுபவரைப் பற்றி கவலையில்லை. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதே என் நோக்கம் என்றார்.


ஷரபோவா, கடந்த ஆகஸ்ட் மாதம் தோள்பட்டை காயம் காரணமாக விம்பிள்டன் தொடரில் இருந்து விலகியது குறிப்பிடத்தக்கது.

# சுருண்டது இலங்கை



பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 204 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் போட்டி நேற்று டுபாயில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய குணரட்ன, ஜே.கே. சில்வா இணை மிகவும் பொறுமையாக ஆடி ஓட்டங்களைச் சேகரித்தது. இந்த ஜோடியைப் பிரிக்கும் கள வியூகத்தை கப்டன் மிஸ்பா உல் ஹக் வகுத்து செயற்பட்டார். இதன் பலனாக இந்த ஜோடி 57 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்தும் மிஸ்பாவின் வலைக்குள் இலங்கை அணி சிக்கித் தவித்தது. அறிமுக வீரர் பிலாவெல் பத்ரி இலங்கை அணியின் அனுபவ வீரர்களின் விக்கெட்டுக்களை கொய்து அணிக்குப் பலம் சேர்த்தார். இவருக்கு இணையாக யுனைட்கான் மனையில் சிறப்பாக பந்து வீசி விக்கெட்டுக்களைச் சாய்த்தார். இலங்கை அணியின் விக்கெட் சரிவை எவராலும் நிறுத்த முடியவில்லை. ஒரு முனையில் பொறுமை காத்த கப்டன் மத்தியூஸ் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க முயன்றார். இந்நிலையில் ஒன்பதாவது விக்கெட்டுக்காக இணைந்த மத்தியூஸ், எரங்க இணை மிகவும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஜோடி 61 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து போராடிய மத்தியூஸ் சதத்தை நெருங்கும் வேளை ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவடைய 20 ஓவர்கள் இருக்கையில் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் மத்தியூஸ் 127 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள் அடங்கலாக 91 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் குணரட்ன 38, ஜே.கே.சில்வா 20, சங்கக்கார 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யுனைட்கான் ஐந்து, பிலொவெல் பத்ரி மூன்று, சயிட் அஜ்மல் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ண தரப்படுத்தல்
# யாழ். ஜொனியன்ஸ் முதலிடம்









**அணிகளின் தர நிலை**

| | | |
|---|---|---|
| 01) | ஜொனியன்ஸ் | 160.0 |
| 02) | மானிப்பாய் பரிஷ் | 124.8 |
| 03) | யாழ்.சென்றல் | 106.6 |
| 04) | ஜொலிஸ்ரார் | 105.5 |
| 05) | கே.சி.சி.சி. | 102.2 |
| 06) | சென்றலைட்ஸ் | 082.4 |
| 07) | ஓல்ட்கோல்ஸ் | 079.6 |
| 08) | யாழ். பல்கலை | 079.4 |
| 09) | திருநெல்வேலி | 069.2 |
| 10) | ஸ்ரான்லி | 066.7 |
| 11) | கிறாஸ் ஹோப்பர்ஸ் | 062.3 |
| 12) | நியூஸ்ரார் | 055.6 |

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகத்தின் ஜோர்ஜ் வெப்ஸரர் வெற்றிக் கிண்ண தரப்படுத்தலில் யாழ். ஜொனியன்ஸ் அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் யாழ். மாவட்டத்தில் சிறந்த அணித் தேர்வை மேற்கொண்டு வருகின்றது. இவ்ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத் தரப்படுத்தலில் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி புள்ளிகளை வழங்கி வருகின்றது. இதில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் அணிகள் முக்கோணச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றன. இந்த வகையில் யாழ். சென்றலில் 12ஆவது அகவையில் சிறந்த அணித் தேர்வு நேற்று வெளியிடப்பட்டது. இதில் யாழ். ஜொனியன்ஸ் 160 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், மானிப்பாய் பரிஷ் இரண்டாமிடத்தையும், யாழ். சென்றல் மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளன.

இதேவேளை, கடந்த 2010, 2011ஆம் ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழக அணியும், 2012ஆம் ஆண்டு கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் இத்தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## விளையாட்டுச் செய்திகள்

# பட்டம் விடுவோம்
## பதிவுகளுக்கு முந்துங்கள்

(பருத்தித்துறை)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை விக்னேஸ்வராவிளையாட்டுக்கழகம் பட்டம் ஏற்றும் விழாவை நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் செயலாளர் விக்னேஸ்வரா கழகம் வல்வெட்டித்துறை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும், இப்பட்டமேற்றும் போட்டியில் வல்வெட்டித்துறை உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளதாகவும், போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் பட்டமேற்றும் போட்டி இடம்பெற்றதாகவும், முதன் முறையாக வல்வெட்டித்துறையில் இப்போட்டி நடைபெறவுள்ளமையால்அதிகளவிலான போட்டியாளர்கள் பங்குகொள்ள வாய்ப்பிருப்பதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (109)



முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் முல்லை ஜாஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. முல்லை ஜாஸ் அணிக்கு கிண்ணம் வழங்கப்படுவதைக் காணலாம். இப்போட்டி கடந்த வாரம் மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# கிண்ணம் வென்றது வதிரி பொம்மர்ஸ்



(பருத்தித்துறை)

பருத்தித்துறை வை.எம்.சி.ஏ.யினால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டப்போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையில் பருத்தித்துறை வை.எம்.சி.ஏ.யினால் நடாத்தப்பட்ட அணிக்கு 7 பேர் கொண்ட கால்ந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. 12 அணிகள் பங்கு கொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியும் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இடம் பெற்ற போட்டியில் கோல் போடுவதற்கு இரு அணிகளும் முயற்சித்த போதும் பொம்மர்ஸ் அணியின் வீரன் சாரங்கன் போட்டியின் 25ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கோலொன்றினைப் பெற்றுக் கொடுத்தார். பதிலுக்கு இரு அணிகளும் கோல் போடு வதற்கு முயற்சித்த போதும் கோலெதனையும் பெற முடியவில்லை.

இறுதியில் வதிரி பொம்மர்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது. போட்டியின் சிறப்பாட்டக்காரனாக நவ ஜீவன்ஸ் அணியின் கோல் காப்பாளர் நிருசாந் தெரிவானார். போட்டியின் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக உறுப்பினர் வீ.கே.சண்முகநாதன், பருத்தித்துறை லீக் கால்பந்தாட்ட செயலர் டீ.வரதராசன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களை வழங்கி வைத்தனர். (48)

# தேவைகளைப் பூர்த்தி செய்தால் வடக்கில் சிறந்த வீரர்கள் மிளிர்வர்

**இலங்கை மேசைப்பந்தாட்ட பயிற்சியாளர் அபிவிருத்திக் குழுவின் மத்திய உபதலைவர்**

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் மேசைப்பந்தாட்ட போட்டிக்கான போதியளவு மைதானங்கள், உபகரணங்கள் அதிகம் இல்லை. இவ்வாறான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்துகொடுக்கப்படும் பட்சத்தில் வடமாகாணத்தில் திறமையான மேசைப்பந்தாட்ட வீரர்கள் உருவாக வழியேற்படும் என இலங்கை மேசைப்பந்தாட்ட பயிற்சியாளர் அபிவிருத்திக் குழுவின் மத்திய உபதலைவர் மன்சில் முதலீப் தெரிவித்தார்.

தேசிய ரீதியில் வெற்றிகளையீட்டிய யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட வீர, வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு விழா கடந்த 29ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட பயிற்றுநர்கள் சரளமாக ஆங்கிலம் கதைக்கின்றனர். இது அவர்களின் பெரிய பலம். தென் பகுதியிலுள்ள பயிற்றுநர்களில் சிலர் கூட இவ்வளவுக்கு ஆங்கிலம் கதைக்கமாட்டார்கள்.

அத்துடன், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் வீரர்கள் மேசைப்பந்தாட்டப் போட்டிகள் மீது மிகுந்த ஆர்வமாகவுள்ளனர். அவர்களுக்கு மேசைப்பந்தாட்டத் திடல்களின் தேவைகளும் அதற்கான உபகரணங்களின் தேவைகளும் அதிகமாகக் காணப்படுகின்றன.

வடமாகாண வீரர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு பல தேவைகள் இருக்கின்றன. அந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் அவர்கள் சிறப்பான ஆளுமைகளினை வெளிப்படுத்துவார்கள்.

மாவட்டங்களின் மேசைப்பந்தாட்டச் சம்மேளனங்கள் தங்கள் மாவட்டங்களிலுள்ள மேசைப்பந்தாட்ட வீரர்கள் மற்றும் பயிற்றுநர்களின் ஆளுகைகளை வளர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும்.

தேசிய மேசைப்பந்தாட்டச் சங்கங்களின் ஊடாக உதவிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் மேசைப் பந்தாட்டத்தினை வளர்த்தெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விசேட கூட்டம்

வலிகாம கால்பந்து லீக்கிற்குட்பட்ட மத்தியஸ்தர்களுக்கான விசேட கூட்டமானது அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை 4ஆம் திகதி காலை 10. மணிக்கு இடம்பெறவுள்ளது. புதிதாக இணையவிரும்பும் மத்தியஸ்தர்களையும், ஏனைய கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களையும் குறித்த கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் செயலாளர் இ.யுகராஜ் கேட்டுள்ளார். (48, 93)

# வென்றது வதிரி டைமன்ஸ்

(சுன்னாகம்)

கந்தையா நல்லதம்பி நினைவுக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டத்தில் வதிரி டையமன்ஸ் அணி வெற்றி பெற்றது. வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சூராவத்தை நியூவொரியஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கந்தையா நல்லதம்பி நினைவுக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் வொரியர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு ஐந்து பேர் கொண்ட இக்கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதல் சுற்று ஆட்டங்கள் லீக் அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றபோட்டியில் வதிரி டையமன்ஸ் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. இரு அணிகளும் மாறி மாறி கோல்களைப் பெற்று வந்ததால் இவ்ஆட்டம் பெரும் பரபரப்பு மிக்கதாகவிருந்தது. இறுதியில் வதிரி டையமன்ஸ் அணி 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (93)

**வி**கடன் ஊடகவியலாளராகிய மகா தமிழ்பிரபாகரன் சுற்றுலா வீசாவில் வந்து சந்தேகத்துக்கிடமான வகையில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டார் எனும் குற்றச்சாட்டில் கடந்த 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மகாதமிழ் பிரபாகரன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்றும் 24 வயதான அவர் தன்னை ஒரு ஊடகவியலாளர் என்று தெரிவிக்கவில்லை என்றும் கூறும் இலங்கையின் காவல்துறை பேச்சாளர் சுற்றுலா வீசாவில் வருபவர்கள் இவ்வகையான நடவடிக்கையில் ஈடுபட முடியாது என்பதை சுட்டிக்காட்டினார். அந்தவகையில் இலங்கையின் குடிவரவு அதிகாரிகளுக்கு தான் ஒரு ஊடகவியலாளர் என்னும் உண்மையை மறைத்ததனூடாக பொய்யான தகவல்களை வழங்கினார் என்னும்பெயரில் தண்டனைக்குள்ளாகும் சந்தர்ப்பங்களும் மகா தமிழ் பிரபாகரனுக்கு இருந்தன. எனினும் விசா விதிமுறை மீறிய குற்றச்சாட்டில் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட தமிழக ஊடகவியலாளர் மகாதமிழ் பிரபாகரன் நாடு கடத்தப்பட்டிருக்கின்றார்.. பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் இவரை நீதிமன்றில் ஆஜர் செய்து அறிக்கை சமர்ப்பித்ததற்கு இணங்க குறித்த நபரை நாடு கடத்துமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த மகாதமிழ் பிரபாகரன் முன்பொரு தடவை இலங்கைக்குள் நுழைந்து திரட்டிய தகவல்கள் மூலம் "புலித்தடம் தேடி" என்றொரு நூலை எழுதி வெளியிட்டிருக்கின்றார். அந்த நூலை வெளியிட விகடன் மற்றும் சீமான் தரப்புகளிடையே ஏற்பட்ட போட்டியில் சீமானே வெற்றி பெற்ற கதைகளும் உண்டு. அந்தளவிற்கு இலங்கைத் தமிழர்களின் அவலங்களை காசாக்கும் கலையில் இவரும் ஒன்றும் மணிமேகலைக்கு சளைத்தவரில்லை என்பதை ஏற்கனவே நிரூபித்திருக்கின்றார். அந்த உருசிதான் மீண்டும் இலகுவாக இலங்கையரசுக்கு தண்ணி காட்டிவிடலாம் என்னும் நப்பாசையை அவருக்குள் விதைத்திருக்கவும் கூடும்.

எப்படியிருந்த போதும் ஊடகவியலாளர்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் கைதுகள் ஒரு ஜனநாயக ஆட்சிக்கு இழுக்கு ஏற்படுத்துபவையேயாகும். செய்தியறியும் சுதந்திரம் எல்லா மக்களுக்கும் உண்டு. அதனை இலகுவாக்கும் பணியினை செய்பவர்கள் ஊடகவியலாளர்கள்தான். இந்த ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் சுதந்திரமானது பொது மக்களின் பெயரிலும் ஒவ்வொரு தனிமனிதர்களின் சுதந்திரத்தின் பெயரிலும் வழங்கப்படுவதேயாகும்.

ஆனால் எத்தனை ஊடகவியலாளர்கள் இந்த சுதந்திரத்தை பொதுமக்களின் பெயரிலோ பொது நன்மைகளின் பெயரில் உண்மையாக பயன்படுத்துகிறார்கள். அதனை மதித்து நடக்கின்றார்கள் என்கின்ற கேள்விகள் எழுப்பப்பட்டே ஆகவேண்டும்.

# மடியில் கனமில்லாவிட்டால் சிறிதரன் மறுதலித்திருக்கமாட்டார்!

எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.




பத்திரிகையாளர்கள் எனும் பெயரில் எதையும் எப்படியும் எழுதிவிட்டு போவது பத்திரிகை சுதந்திரமல்ல. செய்தி சேகரிப்புகளில் சொந்த அரசியல் விருப்புவெறுப்புக்கள் தாக்கம்செலுத்தக் கூடாது. ஊடகதர்மம் என்பது இன, மத,மொழி, சாதி... உணர்வுகளுக்கு அப்பாற்பட்டதாகும். சொந்த உணர்வுகளின் சாயமின்றியே ஊடகவியலாளர்கள் செயற்படவேண்டும். ஊடகத்துறை என்பது முதலில் தர்மம். பின்புதான் அது தொழிலாகும். அதனால்தான் ஊடகவியலாளர்களுக்கு யாதொரு இன்னல்நேரினும் உலகெங்குமிருந்து அவர்களுக்கான ஆதரவுக்குரல்கள் எழுப்பப்படுகின்றது. பணம் பண்ணும் நோக்குடன் மட்டுமே செயற்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தங்களின் அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறான செய்திகளை பூதாகாரப்படுத்தி சித்தரிக்க முனைவதும் ஊடகதர்மமல்ல.

ஆனால் இந்த தமிழ்நாட்டு எழுத்தாளர்களோ ஊடகவியலாளர்களோ தமது இலங்கை பற்றிய செய்தி சேகரிப்புகளில் தமது இன உணர்வுகளுக்கே முதலிடம் கொடுக்கிறார்கள். பணம்பண்ணுவதையே கண்ணும் கருத்துமாக கொண்டியங்குகிறார்கள். ஒரு சிலரைத் தவிர்த்து தொண்ணூற்றி ஒன்பது வீதமானவர்கள் இலங்கை தமிழர்களின் இரத்தங்களை வைத்து பிழைப்பு நடத்துவதை யாரும் மறுக்க முடியாது. இவர்களது விறுவிறுப்பும் திகில்களும் நிறைந்த தொடர்களுக்கு இலங்கைத்தமிழர்களின் இரத்தங்களும் மரணபரியந்தங்களும் விலைபேசப்படுகின்றன.

இப்படி எழுத்து வியாபாரம் செய்து உருசி கண்டவர்கள் மீண்டும் மீண்டும் இலங்கையில் ஒரு யுத்த சூழலை தக்க வைக்கவே விரும்புகின்றனர். அதற்காகவே இராணுவ நிலைகளையும் பிரசன்னங்களையும் மட்டுமே படமெடுப்பதில் கவனமாயிருந்திருக்கின்றார். இன்னும் மக்கள் சிறைப்பிடிக்கப் படுகிறார்கள். சித்திரவதை செய்யப்படுகிறார்கள் என்றெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்கு புலுடா விடுவது ஊடகதர்மமல்ல. ஒரு நாட்டின் இறைமைக்கும் சுய கௌரவத்துக்கும் பங்கம் விளைவிக்கும் இவர்களது இந்த இழிவான எழுத்து வியாபாரங்களை ஊடகவியலின் பெயரால் யாரும் நியாயப் படுத்தி விட முடியாது.

அதனால் தான் இந்த மகாதமிழ் பிரபாகரனை வரவழைத்து உபசரித்து உடனிருத்திக் கொண்டு தி... சிறிதரன் இவர் கைதானது... அவரை எனக்கு வெறும் நண்பராகத்தான் தெரியும் அவர் ஊடகவியலாளர் என்று எனக்கு தெரியவே தெரியாது என்று பி.பி.சி வானொலியில் அடித்து சத்தியம் செய்தார். மடியில் கனமில்லாவிட்டால் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இந்த மகாதமிழ் பிரபாகரனை மறுதலித்திருக்க மாட்டரே! அவர் ஒரு ஊடகவியலாளர் என்றும் இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது என்றும் வானுக்கும் மண்ணுக்குமாய் துள்ளியல்லவா குதித்திருப்பார்?

# தலைமுறைகள்



- அதிஷா -

**ச**மீபத்தில் இவ்வளவு எளிமையான ஒரு தமிழ்ப் படத்தை பார்த்த நினைவில்லை. தமிழ்சினிமாவில் எப்போதாவது அரிதாக மேற்கொள்ளப்படும் "மாற்று சினிமா" முயற்சிகளில் ஒன்றாகவே "தலைமுறைகள்" திரைப்படத்தையும் குறிப்பிடலாம். நிறையவே சின்னதும் பெரியதுமாக ஆங்காங்கே குறைகள் இருந்தாலும் மாற்றுசினிமா முயற்சி என்கிற அளவில் இப் படம் நிச்சயம் வரவேற்கப்படவேண்டிய ஒன்றுதான்.

நான் சென்றபோது தியேட்டர் காலியாகத்தான் இருந்தது. நேரம் செல்லச் செல்ல நிறையப்பேர் நிறைந்தனர். அது ஒரு விடுமுறை நாள் என்பதால் பிரியாணிக்கும் என்றென்றும் புன்னகைக்கும் டிக்கட் கிடைக்காமல் திட்டிக்கொண்டே சீற்களில் அமர்ந்தனர். நிறைய காதலர்கள், கூட்டம் குறைவாக இருக்கும் என்று நினைத்து வந்து ஏமாந்து போனதை பார்க்க முடிந்தது.

யாருக்கும் படம் பார்க்கிற ஆர்வமேயில்லை. இவ்வளவு தூரம் வந்துவிட்டோம் எதையாவது கருமாந்திரத்தை பார்த்துவிட்டு போவோம் என்கிற மனநிலையோடுதான் அமர்ந்திருந்தனர். சிலர் அதை உரக்கவே தங்களுடைய மனைவிகளிடமும் நண்பர்களிடமும் சொல்லிக்கொண்டிருந்தனர். டைட்டில் ஓடத்துவங்க பின்னணியில் ஒரு பாட்டு ஒலிக்க.. அப்போதே திட்டத் துவங்கிவிட்டிருந்தது பார்வையாளர் படை. ஆனால் படம் செல்ல செல்ல எல்லோருமே இரசித்துப் பார்க்க ஆரம்பித்துவிட்டனர். ஆச்சர்யம்தான்!

இயல்பான அலட்டலில்லாத நகைச்சுவை காட்சிகள் படம் முழுக்க. எந்த இடத்திலும் "இது காமெடி சீன் எல்லாரும் சிரிங்க" என்கிற கோணங்கித்தனங்களெல்லாம் இல்லவே இல்லை. போலவே சீரியஸ் காட்சிகளும் இது சோக சீன் என்பதை அறிவிக்கிற அச்சுபிச்சு டொட்டொடொட்டடோய்ங் இசை கூட இல்லை. அதுவும் இயல்பாக கடந்து போகிறது.

மூன்று முறையும் ஆண்குழந்தையே பெற்று நான்காவது அட்டெம்ப்ட் கர்ப்பமாகி பிள்ளை பெற்று வீடுதிரும்புகிற மகளை ஆசிர்வதிக்கிறார் தந்தை. "என்னம்மா இந்த முறையும் ஆம்பளை பிள்ளையா" என்று கேட்க.. அந்தப் பெண் "இல்லைப்பா பொண்ணு" என்று சொன்னதும் பெருமிதமாக அவளைத் தூக்கி "நீ ஜெயிச்சுட்ட" என்று அந்த பெரியவர் சொல்லும்போது தியேட்டரில் விசில் பறக்கிறது!

கிளைமாக்ஸில் தாத்தா இன்றி அந்தப் பையன் மட்டும் நடந்துபோகிற அந்த ஒரே ஒரு காட்சி போதும்.. பாலுமகேந்திராவின் திறமையைச் சொல்ல! (ஆனால் அதற்கு பிறகு வருகிற மொக்கை காட்சிகள் படத்தை கி.மு காலத்துக்கே இழுத்துச்செல்கிற முட்டாள்த்தனம்.. தயாரிப்பாளர் சசிகுமாருக்காக செய்துகொண்ட சமரசமாக கூட இருக்கலாம்.. எரிச்சல்)

படத்தில் கதையெல்லாம் இல்லை. சில நல்ல காட்சிகள் அல்லது தருணங்களின் தொகுப்பாக இப்படம் இருக்கிறது என்று சொல்லலாம்.

மூன்று வெவ்வேறு தலைமுறை மனிதர்களின் சமகால சிக்கல்களின் தொகுப்பு என்று இப்படத்தை பற்றிச் சொல்லலாம்.

ஆங்கிலமும் அந்நிய நாகரீகமும் வலிந்து திணிக்கப்பட்ட அல்லது ஊட்டப்பட்ட இன்றைய தலைமுறை சிறுவன், சாதி மத வெறி அல்லது பற்றுமிக்க எப்போதும் எதிலும் தூய்மை பேணுவதாக காட்டிக்கொள்கிற தாத்தா, கிராமமா நகரமா, பணமா பாசமா.. என்கிற ஊடாட்ட மனநிலையில் தவிக்கும் சிறுவனின் தந்தை... என இந்த மூன்று பாத்திரங்களும் ஒரு கிராமத்தில் சந்தித்து தங்களிடம் இருக்கிற நல்ல விஷயங்களை மட்டும் மற்றவருக்கு கடத்துகின்றன. அங்கே இயல்பாக உண்டாகிற மகிழ்ச்சி நமக்குள்ளும் உருவாகிறது. அவ்வளவுதான் தலைமுறைகள்!

பாலுமகேந்திரா தன் இளமையிலேயே நடிக்க ஆரம்பித்திருக்கலாம். அவருடைய அந்த நடையும், குரலும், கண்களும்.. சிம்ப்ளி வாவ்! அதுபோலவே வினோதினியின் பாத்திரமும் அவருடைய இயல்பான நடிப்பும் அருமை. ஆரம்ப காட்சிகளில் றுறுகு யூக்காசூனா மாதிரி இருக்கிற அந்தச் சிறுவன் எரிச்சலூட்டினாலும் போகப்போக பிடித்துப்போகிறது. படத்திற்கு இசை இளையராஜா என்பதே யாரோ சொல்லித்தான் தெரிந்தது. பையன் முதன்முதலாக வீட்டுக்குள் நுழைந்து தாத்தாவை தேடும் காட்சியில் மட்டும் லேசாக ராஜாசார் எட்டிப்பார்க்கிறார். மற்றபடி நடுவுல நிறையவே அவரைக் காணோம்!

இதே படம் கொரிய மொழியிலோ ஈரானிய மொழியிலோ பிரேஞ்சிலோ வெளியாகியிருந்தால் சப்டைட்டிலோடு பார்த்துவிட்டு உலக சினிமா இரசிகர்கள் கொண்டாடியிருப்பார்களோ என்னவோ... தங்கமீன்கள், ஓநாயும் ஆட்டுக்குட்டியும் போன்ற படங்களுக்கு இருந்த பரபரப்பில் பத்து சதவீதம் கூட இப்படத்துக்கு இணையத்தில் பார்க்க முடியவில்லை. அனேகமாக இந்த விமர்சனத்தை நீங்கள் படித்துக்கொண்டிருக்கும்போது இப்படம் தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்காது. திருட்டு டிவிடி கிடைத்தால் வாங்கிப்பாருங்கள். இந்த எளிய படம் என்னைப்போலவே உங்களுக்கும் பிடிக்கலாம்.


# புத்தாண்டுக்கு ஒரு தகவல்: அழகாகக் கோபப்படுங்கள்!

- டாக்டர் மோகன் -

பெரும்பாலும் காரணம் இல்லாமல் கோபம் வருவது இல்லை! ஆனால், மிக அரிதாகத்தான் அது நியாயமான காரணத்துக்காக வருகிறது - பெஞ்சமின் ∴பிராங்ளின் வாரத்தை இது. ஆக, கோபம் என்பது மீண்டும் மீண்டும் ஓர் எதிர்மறை எண்ணமே என்பது தெளிவாகிறது. எண்ணங்கள் இல்லாமல் மனித மனம் கிடையாது. ஆகவே, கோபப்படுங்கள் ஆனால், அதற்கு ஆட்படாதீர்கள். அதாவது அழகாகக் கோபப்படுங்கள்.

உளவியல் துறையில் கோபத்தை நிர்வகிக்க (Anger management) பயிற்சி அளிப்பதற்காகவே சிறப்பு வல்லுநர்கள் இருக்கிறர்கள்.

கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டாம் ஆனால், அதை வெளியேற்றும் விதங்களை, விகிதாசாரங்களை மாற்றி அமையுங்கள். அப்போதுதான் அக்கோபத்துக்கான பலன் கிடைக்கும். அல்லது குறைந்தபட்சம் அதனால் நேரும் எதிர்மறை விளைவுகள் தவிர்க்கப்படும். அதற்கு சில உபயோகமான யுக்திகளையும் சொல்லித்தருகிறது உளவியல்.



✦ கோபம் ஒற்றை உணர்வு அல்ல. ஒரு கோபம் இன்னொன்றை, இன்னொன்று மற்றொன்றை என அது ஒரு சங்கிலித் தொடர்போல உருவாகிறது. அமைதியான குளத்தில் கல்லெறியும்போது ஏற்படும் அலைகள் போன்றது கோபம். ஒருமுறை கல் எறிவதுடன் நிறுத்திக்கொண்டால் அதுவாக அடங்கிவிடும். திரும்பத் திரும்ப கல் எறிந்தால் அடங்கவே அடங்காது. எனவே, கோபப்படும் வகையில் ஒரு நிகழ்வு நடந்த பின்பு திரும்பவும் அதையே நினைக்காதீர்கள். நினைக்க, நினைக்க கோபம் தனக்கான நியாயத்தைக் கற்பித்துக்கொண்டு பல்கிப் பெருகும்.

✦ அப்படியும் அந்நிகழ்வை மறக்க முடியவில்லையா? உடனே கிளம்புங்கள் உல்லாசச் சுற்றுலாவுக்கு. ஆனால், இந்தச் சுற்றுலாவுக்கு செலவு கிடையாது. பஸ் பிடிக்கவும் தேவையில்லை. இது மன வெளியில் மேற்கொள்ளப்படும் பயணம் (Mental tour). உங்கள் குழந்தையின் முதல் முத்தமோ காத லியின் கன்னங்களோ உங்களின் சந்தோஷத் தருணங்களை நினைத்துக்கொள்ளுங்கள்.

✦ கோபம் வருகையில் ஒரு செய்முறை. கண்ணாடி முன்பு நின்று கோபப்படுங்கள். உங்கள் முக பாவனைகளைப் பாருங்கள். ஒன்று, பயந்து பதறி விடுவீர்கள். இல்லை, அது பயங்கர காமெடியாக இருக்கும். சிரித்துவிடுவீர்கள். போயே போச்சு கோபம்!

✦ நிகழ்வு நடந்த இடத்தில் இருந்து உடனே கிளம்பிவிடுங்கள். ஆனால், நண்பருடன் அல்ல, தனியாக. ஏனெனில் உடன் வருபவர் உங்களுக்கு வக்காலத்து வாங்கி உங்கள் கோபத்துக்கு எண்ணெய் வார்க்கலாம்.

✦ கோபம் வருகையில் ஒரு நடைபயிற்சி மேற்கொள்ளலாம். தண்டால் எடுப்பது, பளு தூக்குவது போன்ற உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம். பிடித்தமான விளையாட்டுகளை விளையாடலாம். இதுபோன்ற சமயங்களில் கோபத்தின் காரணமாக வெளியேறும் மனச்சோர்வுக்கான ஓமோன்கள் குறைந்து, மகிழ்ச்சிக்கான எண்டோர்பின்கள் சுரக்கத் தொடங்கும்.


✦ தாமதப்படுத்துங்கள். கோப உணர்வைக் காட்டத் துடிப்பதில் நீங்கள் காட்டும் ஒரு நிமிடத் தாமதம்கூட உங்கள் வாழ்வின் போக்கையே மாற்றக்கூடும். இதை நிரூபிக்கப் பெரியதாக அறிவியல் ஆய்வுகள் ஏதும் தேவையில்லை. அடுத்த முறை யார் மீதேனும் உங்களுக்கு கடும் கோபம் ஏற்படுகையில் உடனடியாக அவரை மனதுக்குள் திட்டுங்கள். ஒரு நிமிடம் ஆசுவாசப்படுத்திக்கொண்டு, முடிந்தால் மனவெளிப் பயணம் போய்விட்டு அவரை அழைத்துத் திட்டுங்கள். கோபம் பாதியாகக் குறைந்திருப்பதை உணர்வீர்கள்.


✦ எதிராளியின் இடத்தில் நின்று யோசியுங்கள். சாமானியர்களும் மகான்களாகும் வாய்ப்பு இது. அடிப்படை மனிதப் பண்பு, மனித நேயம் இது. ஒவ்வொரு முறையும் கோபப்படும்போது எதிராளியின் இடத்தில் நின்று சிந்திக்கும்போது ஒன்று அவரது செய்கையின் நியாயம் புரியும். நீங்களும் அதுபோல் நடந்துகொண்ட சந்தர்ப்பங்கள் நினைவுக்கு வரும். காணாமல் போகும் கோபம். அல்லது எதிராளியின் தவறு பிடிபடும். மன்னிப்பு எதிராளிக்கு மட்டுமல்ல; உங்களுக்கே அது ஓர் அருமருந்து.

# மாடிவீட்டு விவசாயி!



"வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்" என்ற பழமொழியை நிஜமாக்கி காட்டியுள்ளார், சீனாவைச் சேர்ந்த பெங் குயிகென் என்ற தொழில் அதிபர். செஜியாங் மாகாணத்தில் வசித்து வரும் இவர், தன் நான்கு மாடி வீட்டின் மொட்டை மாடியில், கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார். மொட்டை மாடியின் தரை முழுவதும் மணல் பரப்பி, நெல் மற்றும் பழ வகைகளை உற்பத்தி செய்து வருகிறார். அவர் கூறுகையில், "எத்தனையோ தொழில் செய்தாலும், விவசாயம் செய்ய வேண்டும் என்ற ஆசை, நீண்ட நாட்களாக இருந்தது. அதை, என் வீட்டிலேயே செய்து பார்த்தேன். வழக்கமாக, வயல்களில் விவசாயம் செய்யும்போது, மண் அரிப்பு போன்ற பிரச்சினை இருக்கும். ஆனால், இந்த மாடி விவசாயத்தில், அந்தப் பிரச்சினை இல்லை. தண்ணீரும் அதிகமாகத் தேவைப்படாது; நல்ல இலாபம் கிடைக்கிறது. ஜப்பானில், கடலுக்குள்ளேயே விவசாயம் செய்கின்றனர். அதை ஒப்பிடும்போது, இதெல்லாம் சர்வ





# இன்று

இன்று புத்தக கண்காட்சியில்
ஒரு திருவள்ளுவரை சந்தித்தேன்
தனது கவிதை தொகுப்பிற்கு
ராயல்டி கிடைக்கவில்லையென்று விசனப்பட்டார்
தவிர
தான் எப்போதும்
கிரவுன் சைசில் எழுதுவதால்
பதிப்பகம் கிடைக்கவில்லையென்று புலம்பினார்
பேசாமல் தொல்காப்பியர் என்ன கொம்பா என்று
பிளாக்கிலோ பேஸ்புக்கிலோ எழுதலாம்
பொழுதாவது போகுமென்றார்

இன்று புத்தக கண்காட்சியில்
ஒரு பாரதியை சந்தித்தேன்
என்ன கவிஞரே சுகமாவென்று கேட்டேன்
யாரும் இருக்கும் இடத்தில் இருந்தால்
எல்லாம் சுகமென்றார்
இது கண்ணதாசன் சொன்னதாயிற்றே
குழம்பியபடி பார்த்தேன்
என்ன இவ்வளவு விரக்தியென்று கேட்டேன்
சாகித்ய அகாடமி விருதை எதிர்பார்த்து
தலை நரைக்கிறதென்று சொன்னார்

இன்று புத்தக கண்காட்சியில்
ஒரு அவ்வையாரை சந்தித்தேன்
எல்லாம் ஆணாதிக்கம் ஆணாதிக்கம்
என்று தலையில் அடித்துக் கொண்டார்
அதியமானிடம் வாங்கிய நெல்லிக்கனியை
திரும்ப கொடுக்கப் போவதாக
ஆவேசத்துடன் சொன்னார்

இன்று புத்தக கண்காட்சியில்
ஒரு கம்பரை சந்தித்தேன்
அவரது கதையை
ஒரு மெகா சீரியல் இயக்குனர்
திருடிக்கொண்டதாக புகார் சொன்னார்
அடுத்து கண்காட்சிக்கு
ஒரு ஐயாயிரம் பக்க நாவல் எழுதும்
உத்தேசமிருப்பதாக சொன்னார்

இன்று புத்தக கண்காட்சியில்
ஒரு மோசிகீரனாரை சந்தித்தேன்
பாவம் இளைத்து களைத்து போயிருந்தார்
தனியாக நாற்காலில் அமர்ந்தபடி
தனது கவிதைப்புத்தகத்தை கையிலெடுத்து
தனக்கு தானே விசிறிக் கொண்டிருந்தார்
தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
எங்கேவென்று கேட்டேன்
தனக்கு
டீ வாங்கி வர போனதாக
சொல்லி சிரித்தார்.

- விநாயக முருகன் -

# கல்வி அபிவிருத்தித்திட்டங்களே வடக்கின் உயர் சாதனைக்கு காரணம்

## கல்வி அமைச்சின் செயலாளர்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட கல்வி அபிவிருத்திக்கான திட்டங்களே உயர்தரப்பெறுபேற்றில் வடமாகாணம் சாதனைபடைக்க காரணமாகும் என கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியிடப்பட்ட பரீட்சை முடிவுகளின் படி வடமாகாணத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 63.8 வீதமானோர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மாகாணரீதியாக வடமாகாண மாணவர்கள் முதலாவது இடத்தினைப் பெற்றிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் கல்வி அமைச்சர், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் வழி காட்டலுடன் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான பங்குபற்றலுடன் மாணவர்களின் கடின உழைப்பு, விடாமுயற்சி என்பவற்றினால் இக்கௌரவம் பெறபபட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம், குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை (PSDG), Necord, EnRep, ISURU, KOICA, UNICEF வேலைத்திட்டம், இந்திய அரசின் நிதி உதவித்திட்டம், ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடு என்பவற்றின் ஊடாக 4 ஆயிரம் மில்லியன் ரூபா கடந்த 4 ஆண்டுகளில் வடமாகாணத்தின் கல்விக்காக முதலீடு செய்யப்பட்டிருப்பதும் இதனூடாக சேதமடைந்த பாடசாலைகள் மீள்கட்டுமானம் செய்யப்பட்டிருப்பதுடன் புதிய வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வுகூடங்கள், நூலகங்கள், ஆசிரிய விடுதிகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இக்காலப்பகுதியில் மூவாயிரத்துக்குமதிகமான புதிய ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் கற்பித்தல் செயற்பாடுகள் மிகுந்த அக்கறையுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கணிதம், விஞ்ஞானம், தகவல்தொழில்நுட்பம், ஆங்கிலம் ஆகியபாடங்களுக்குரிய ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருந்ததுடன் அவர்களுக் கான விசேட செயலமர்வுகளும் பயிற்சிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாணவர்களுக்கு விசேட பயிற்சி வகுப்புக்களும் கருத்தரங்குகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு சிறந்த துறைசார்ந்த ஆசிரிய குழாத்தின் மூலம் இப் பயிற்சி வகுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமையும் இச் சிறப்பான அடைவு மட்டத்திற்கு காரணமாக அமைந்துள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வரவேற்பு நிகழ்வு



(அரியாலை)

அரியாலை முள்ளி இசை நிலைய நிர்வாகத்தினர் தங்களின் முள்ளி கிராமத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலமாக வடக்கின் வசந்தம் மூலம் மின்னிணைப்பை இலவசமாக பெற்று தந்த நல்லூர் பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி பிரதேச அமைப்பாளர் அம்பலம் இரவீந்திரதாசனுக்கு அவ்வூர் மக்களும் சனசமூக நிலையமும் சேர்ந்து அண்மையில் வரவேற்பு விழாவை நடாத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வில் கிராம அலுவலர் விஜிதரன் நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் வ.ஸ்ரீகணேசா, தலைவர் ஜோ.யோகசீலன், செயலாளர் கு.சுகுணசீலன், தி.கெஜிதன் பனை தென்னைவள அபிவிருத்திச்சங்கச் செயலாளர், பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அமைப்பு அங்குரார்ப்பணம்

பொலிகை மருதாம்புலம் அம்பிகை இந்து மகளிர் மன்றம் என்ற அமைப்பு ஆலய பரிபாலன சபையினரால் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை பொலிகை பத்திரகாளி அம்பாள் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நிர்வாக சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம்வருமாறு தலைவராக திருமதி ஜெ.நிசாலினி, உபதலைவராக திருமதி ம.தெய்வநாயகி, செயலாளராக செல்வி ச.ஜனனி, உபசெயலாளராக திருமதி ஐ.அதீபா, பொருளாளராக திருமதி மு.திருவருட்செல்வி, ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக, திருமதி சி.இராசநாயகி, திருமதி பா.உதயகுமாரி, திருமதி கோ.மனோரஞ்சிதம், திருமதி க.வசந்தமலர், திருமதி சு.ஜெகதீஸ்வரி, திருமதி சி.ஜெயசிறி, திருமதி உ.இன்பமலர், திருமதி ப.ஆதிரை, செல்வி சி.கவிப்பிரியா, செல்வி ஞா.வினோதினி, போசகர் திருமதி க.பத்மநாயகி கணக்கு பரிசோதகர் ச.சித்திரா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (18)


ஜனரஞ்சகத்
தன்மையை
முதன்மைப்
படுத்தி
பக்கம் சாராமல்
துணிச்சலுடன்
தரமான
அம்சங்களை
அள்ளிவரும்
வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்...

02. 01. 2014






- இலங்கையை உலுப்பும் ஜெனீவா காய்ச்சல்
- விஷம் வைக்கப்பட்டதா விடுதலைப் போராளி அரபாத்துக்கு?!
- மலையகத்துக்கு அவசியமான குடியிருப்பு
- தீராப் பிரச்சினையாய் யானைகளின் அட்டகாசம்!
- எங்கே போகிறது எங்களின் கலாசாரம்?

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்...

இது மோசம்?

சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

# சட்டவிரோதமான கடைகள் வர்த்தகர்கள் விசனம் தெரிவிப்பு

(மானிப்பாய்)

யாழ். நவீன சந்தையில் சட்ட விரோதமான முறையில் புதிய கடைகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நவீன சந்தைக்கும் மரக்கறி சந்தைக்குமிடையிலான பகுதியில் இதுவரை காலமும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமே ,இருந்து வந்தது.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இரவோடிரவாக அவை அகற்றப்பட்டு தகரத்தினாலான கடைகள் அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக நவீன சந்தைக்கான சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இல்லாது போயுள்ளது.

அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட குறித்த கடைகளின் கீழ் மலசலகூடக்குழி அமைந்துள்ளது. மலசலக்குழி நிரம்பும் சந்தர்ப்பங்களில் அதை எவ்வாறு அகற்றுவது என்று வர்த்தகர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

அத்துடன் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் பயன்பாட்டிற்கென அமைக்கப்பட்ட நவீன சந்தைக்கும் மரக்கறி சந்தைக்குமிடையிலான பகுதியில் காணப்பட்ட மலசல கூடமும் சுமார் பதினொரு மாதங்களாக பூட்டப்பட்ட நிலையில் உள்ளது.


குழாயில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாகவே ,இது பூட்டப்பட்டுள்ளதாகவும் 11 மாத காலமாகியும் இதுவரை அது திருத்தப்படவில்லையென தெரிய வருகின்றது. இதனால் பொது மக்கள், வர்த்தகர்கள் மலசல கூடங்களைப் பயன்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது சம்பந்தமாக உரியவர்களுக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லையென வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு மாதமும் குறித்த காலப்பகுதியில் கடைகளிற்குரிய மாத வாடகை செலுத்தா விட்டால் அத்தியவசிய தேவைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய தீர்வுகளைப் பெற்றுத்தர வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (48)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த குடும்பத்திற்கு உதவி



(கரணவாய்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் திருமுறிகண்டி பிரதேசத்தில் வாழும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 5 ஆயிரம் ரூபா பணத்தொகை குடும்பத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனைவிட இக்குடும்பத்திற்கென அவர்களின் நீர்த் தேவைகளாக 35 ஆயிரம் ரூபா செலவில் கிணற்றினைப் புனரமைத்து வழங்கியுள்ளனர்.

மேற்படி குடும்பத்தினர் இந்து வாலிபர் சங்கத்திடம் வாழ்வாதார உதவிக்காக விடுத்த கோரிகையினை அடுத்தே இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட இக்குடும்பத்திலுள்ள மாணவர்களின் கற்றலுக்கென மாதாந்தம் 6500 ரூபாய் பணத்தொகையின் முதற்கட்டமாக வட்டு இந்து வாலிபர் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான ஆ.சுகாஸ் வழங்கி வைத்தார்.

இதன்போது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். கிளை சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஏ.சபேசன் மற்றும் வட்டு இந்து வாலிபர் சங்க அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். (54)

# இளவாலை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி இல்லை

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து வசதிகள் அற்ற இளவாலை வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் வண்டி இதுவரை வழங்கப்படாதுள்ளமை குறித்து அப்பகுதி மக்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

இளவாலை வைத்திய சாலையில் தற்போது மகப்பேற்று விடுதி கூட இயங்கத் தொடங்கியுள்ள நிலையிலும் இவ்வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி இல்லை.

அதுமட்டுமல்ல 3 ஆயிரம் குடும்பங்கள் இவ் வைத்திய சாலையால் நன்மை பெறுகின்றனர். ஆனால் இவ்வைத்தியசாலையின் வசதிகள் இம் மக்களுக்கு போதாமல் உள்ளது.


ஆனால் நகர்ப்புற வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள் அதிகம் வழங்கப்படுகின்றன. அங்கு அவற்றின் தேவைப்பாடுகள் இருந்தாலும் அத்தியாவசியம் அற்றதாகவே இருக்கின்றன.

ஆனால் அம்புலன்ஸ் வண்டி எமது இளவாலை வைத்திய சாலைக்கு வண்டி அத்தியாவசியமாக உள்ளது. இதனை வடமாகாண சுகாதார அமைச்சு உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இளவாலை வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (இ)



59 ஆவது மணிவாசகர் விழா அண்மையில் காரைநகர் சிவன்கோவில் யாழ்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் மாணவிக்கு தங்கப்பதக்கம் அணிவிப்பதையும் அருகில் நல்லை ஆதீன முதல்வர் இருப்பதையும், மாணவிகளின் கலைநிகழ்வையும் காணலாம். (50)

# ஆயுர்வேதம்



## குழந்தையும் தாய்ப்பாலும்

பிறந்த குழந்தைகளின் ஒரே உணவு தாய்ப்பால் தான். அநேகமாக எல்லாக் குழந்தைகளும் தாய்ப்பால் குடிக்க ஆர்வமுள்ளவையாகவே இருக்கும். ஆயினும் சில நேரங்களில் சில குழந்தைகளுக்கு தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்க முடியாத சிரமம் இருப்பதுண்டு.

இதற்குப் பல காரணங்கள் இருக்கும். மடியில் வைத்துக் கொள்ளும்விதம் சரியாக இல்லையென்றால் குழந்தையால் தாய்ப்பாலை குடிக்க முடியாது. இதை ஆங்கிலத்தில் INCORRECT FEEDING POSITION என்று கூறுவார்கள். குழந்தையினுடைய வாய் தாயாரின் மார்புக் காம்பில் சரியான படி பதியும்படி அதன் பின் தலையைப் பிடித்து வைத்துக். கொள்வதன் மூலம், குழந்தைக்குத் தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிப்பது எளிதாக இருக்கும்.

வாய் அண்ணப் பகுதியில் பிளவு அல்லது உதட்டில் பிளவு போன்று குழந்தைக்கு இருந்தால், அதனால் பாலை உறிஞ்சிக் குடிக்க முடியாது. இதற்கு CLEFT PALATE OR LIP என்று பெயர். சிறு அறுவை சிகிச்சையின் மூலம் இப்பிரச்சினையைச் சரி செய்துவிடுகிறார்கள்.

தாடைப் பகுதியோ நாக்கோ சற்று உள் இருந்திருந்தால் குழந்தையால் பாலைப் பருக முடியாது. இது RETRACTED JAW OR TONGUE என்று அழைக்கப்படுகிறது.

நாக்கினுடைய அடிப்பகுதி தொண்டையினுள்ளே சற்று அழுத்தி அமைந்திருந்தால் வாயினுள்ளே நாக்கினுடைய ஆக்கிரமிப்பு முழுவதும் இல்லாமற்போனால், குழந்தையினுடைய உறிஞ்சும் சக்தி குறைந்துவிடும். மேலும் வாயினுடைய மேற்கூரைப் பகுதியின் பிளவும் சேர்ந்திருந்தால், பாலை உறிஞ்சுவது கடினமாகும். இது PIERRE ROBIN SYNDROME என்று கூறப்படுகிறது.

சில குழந்தைகளுக்கு நாக்கில் படியும் படிவங்களால் பாலை சரி வர உறிஞ்ச முடியாது.

தாய்ப்பால் போதுமான அளவில் இல்லாத போது, நிப்பிள் வைத்த போத்தலின் வழியாகப் பாலைப் புகட்டினால், குழந்தைக்கு மார்புக் காம்பு எது? நிப்பிள் எது? என்ற ஒருவிதமான குழப்பம் ஏற்படும். இதற்கு NIPPLE CONFUSION என்று பெயர்.

தாய்ப்பாலை பருகும்போதே சில குழந்தைகள் தூங்கும். அப்போது அடிக்கடி அதன் வாய் மார்புக் காம்புகளிலிருந்து வெளியே வந்துவிடுவதால், அதனால் சரி வர உறிஞ்சிக் குடிக்க முடியாது. இதனை DROWINESS IN IN FANT என்று அழைப்பார்கள்.

குழந்தைக்கு வாயில் புண் இருந்தால் தாய்ப் பாலையோ, போத்தல் பாலையோ உறிஞ்சிக்குடிக்க முடியாது. தாயின் மார்பு, போத்தலின் நிப்பிள் இவற்றின் மேல் உள்ள அழுக்கினால் குழந்தைக்கு வாய்ப்புண் ஏற்படலாம். பால் தரும் தாயின் உணவில் புளிப்பு, உப்பு, காரம் அதிகமிருந்தாலும் நெய், பால் குறைவாக இருந்தாலும், தாய்ப்பாலின் வழியே சூடான வீர்யம் வருவதால் குழந்தைக்கு வாய்ப்புண் வந்துவிடும். இதிலும் கவனம் தேவை.

குழந்தை பால் குடிக்கவில்லையே என்ற வருத்தத்தினால் அதைக் குடிக்கச் செய்ய் வற்புறுத்தும் விதமாக அடிக்கடி மார்புக் காம்புகளில் குழந்தையின் வாயை வைக்கக்கூடாது. அப்படி 'வற்புறுத்துவதால், சிணுங்குவதும், சுணங்குவதும் அதிகமாகும்.

அப்போதே, "வாழ்க்கையே பெரும் போராட்டம்தான் போலிருக்கிறது" என்று உணர ஆரம்பித்தால், தாய்ப்பாலை சரியாகப் பருகாது. தாயின் மார்பகத்திலிருந்து குழந்தை சரியாகக் குடிக்கத் தொடங்கிவிட்டால் தன்னம்பிக்கை, மகிழ்ச்சி, தாயைத் தனக்கு மிகவும் நெருங்கியவளாக உணர்வது போன்ற இன்பமயமான சுகத்தை அது தூங்கும்போது சப்புக் கொட்டுவதிலிருந்தும், இன்பக் கன்வு காண்பதிலிருந்தும் சிரிப்பதிலிருந்தும் தெரிந்துகொள்ள முடியும்.

**தாய்ப்பால் பெருக..!**

- பாவற்காயைச் சமைத்துச் சாப்பிட்டால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.
- "அஸ்வகந்தி" இலைத் துளிர்களைப் பறித்து எண்ணெயில் வதக்கி துவையல் செய்து சாப்பிட்டால் பால் சுரக்கும்.
- ஆலம் விழுது, துளிர் விதை இவ்விரண்டையும் எடுத்து மையாக அரைத்து, 5 கிராம் எடுத்து பசும்பாலில் கலந்து காலையில் மட்டும் உட்கொண்டு வந்தால் தாய்ப்பால் பெருகும்.
- பப்பாசிக் காயை தோல் நீக்கி கடலைப் பருப்புடன் சேர்த்துச் சமைத்துண்டால் பால் பெருகும்.
- துளசி இலைகளைப் புட்டு போல் அவித்துக் கசக்கிப் பிழிந்து சாற்றை ஒரு கரண்டி குடித்து வர தாய்ப்பால் அதிகரிக்கும். இதயமும் பலமடையும்.
- உணவில் பூண்டு, உழுந்து, பெருங்காயம், வெந்தயம், பாதாம் பருப்பு, செவ்வாழைப் பழம், உருளைக் கிழங்கு பயன்படுத்தப் பால் பெருகும்.
- வெட்டிவேர் சர்பத் அருந்த தாய்ப்பால் பெருகும்.

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து.....

## சிவஞானசெல்வம் தினேஷ்

யாழ்.ஹாட்லிக் கல்லூரி

உயிரியற் பிரிவு -3A

மாவட்ட நிலை : 01

தேசிய நிலை: 06



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையத் தவறினாலும் கடின முயற்சி இருந்தால் சாதிக்க முடியும். நான் க பொ த சாதாரண தரத்தில் 7ஏ,2 பி பெற்றேன். தந்தை ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர். தாய் வீட்டுப் பெண். அண்ணா மருத்துவத் துறை யில் படிக்கின்றார்.

.ஒரு பரீட்சையில் தோற்றுவிட்டோமே என்று நினைத்து சோர்வடையாமல் அடுத்த பரீட்சையில் சாதிக்கவேண்டும் என்ற நம்பிக்கையுடனும் முயற்சியுடனும் கற்றால் வாழ்வில் உயர்நிலையை அடையலாம். அந்தவகையில் என் வெற்றிக்கு காரணமான ஆசிரியர்கள் சகமாணவர்கள் பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

## குணசேகரம் சுகன்யா

வேம்படி மகளிர் கல்லூரி

வர்த்தகப் பிரிவு -3A

மாவட்ட நிலை : 24



புலமைப்பரிசில் சித்தியடையத் தவறினாலும் கூட கல்வியை மட்டுமே இலக்காகக் கொண்டு கற்றமையால் இதனை பெறக் கூடியதாக இருந்தது.

க.பொ.த சாதாரண பரீட்சையில் 4ஏ 2பி,3சி பெறுபேற்றைப் பெற்றேன். க.பொ.த சாதாரண தரம் வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்றேன்.

எனது தந்தை இல்லை, தாய் வீட்டுப் பெண் எனது தாத்தாவே கற்றலுக்கு உதவினார் கல்வியில் மட்டுமல்ல சுவட்டு நிகழ்விலும் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளேன்.நான் இப்பெறுபேறு பெற்றதையிட்டு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் மற்றும் தாய், தாத்தா ஆகியோருக்கு நன்றி கூறுகிறேன்.

## கிருஷ்ணன் நிவேதிகா

வேம்படி மகளிர் கல்லூரி

வர்த்தகப்பிரிவு -3A

மாவட்ட நிலை : 40



இலக்குடன் எந்தவிடயத்தையும் செய்தால் நிச்சயம் வெற்றிபெறலாம். அந்தவகையில் நான் மிகக் கடினமாக கல்வியைக் கற்றேன். பல வினாக்களை செய்வேன்.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 127 புள்ளிகளையும், க.பொ.த சாதாரண தரம் வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்றேன். எனது தந்தை ஆசிரியர், தாய் வீட்டுப் பெண் பெற்றோரின் ஆதரவும் நண்பர்களின் ஒத்துழைப்புமே ஆசிரியர்களின் அக்கறையுமே எனது வெற்றிக்கு காரணமாகும். அந்த வகையில் நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

விடாமுயற்சியுடன் கற்றால் கல்வியில் சாதிக்கமுடியும்.

## மாணிக்கவாசகர் கஜலக்ஷி

வேம்படி மகளிர் கல்லூரி

வர்த்தகப் பிரிவு -3A

மாவட்ட நிலை : 36




கடந்த கால வினாக்களும் குழுவான கற்றலுமே நான் இப்பெறுபேறு பெற்றமைக்கு காரணமாகும்.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 128 புள்ளிகளையும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 5ஏ,4பி பெறுபேற்றையும் பெற்றேன்.எனது தந்தை வர்த்தகர் நான் நாளாந்தம் கற்கும் விடயங்களை தொடர்ச்சியாக கற்பேன், கடந்த கால வினாக்கள் பல வற்றை செய்வேன்.

நான் இப்பெறுபேற்றை பெற்றதையிட்டு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் சக மாணவர்கள் ஆகியோருக்கு நன்றி கூறுகிறேன்.

தொகுப்பு : கணா நாதன்

# கதிரியக்க தாக்கத்திலிருந்து தப்பியது கொழும்பு நகரம்



கொழும்புத் துறைமுகத்தில் அவதானத்துடன் இருந்த சுங்க அதிகாரிகள் கதிரியக்கம் படிந்திருந்த ஒரு கொள்கலனை சரியான வேளையில் கண்டுபிடித்ததனால் கொழும்பு மாநகரமே கதிரியக்க தாக்கத்தில் மூழ்க வேண்டிய ஆபத்து தவிர்க்கப்பட்டது.

ஜப்பானின் யொக்கோ ஹோமா துறைமுகத்தில் இருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு சமீபத்தில் கொள்கலன்களை ஏற்றிவந்த கப்பலிலேயே இது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் வாகனங்களின் உதிரிப்பாகங்கள் பெருமளவில் கொண்டு வரப்பட்டன. இதனை அவதானித்த சுங்க அதிகாரிகள் சிசியம் என்ற கதிரியக்க சக்தியைக் கொண்ட பொருட்கள் இருப்பதை அவதானித்தார்கள்.

இது வெளியில் இருந்தால் மனிதர்களின் உடலில் தீப் புண்கள் ஏற்படுவதுடன், மரணத்தை ஏற்படுத்தக்கூடிய பாரதூரமான கதிரியக்க தாக்கமும் ஏற்படும் என்று அறிவிக்கப்படுகிறது. டிசம்பர் 11ஆம் திகதியன்று இந்த கொள்கலன் திறக்கப்பட்ட போது கொழும்புத் துறைமுகத்தில் உள்ள கதிரியக்கத்தை கண்டுபிடிக்கும் கருவி ஆபத்தை அறிவுறுத்தும் மணி ஒலிக்க ஆரம்பித்தது.

இதனால், சுங்க அதிகாரிகள் உடனடியாக அந்த கொள்கலனை மூடிவிட்டார்கள்.

துறைமுகத்தில் தன்னியக்க கருவிகள் கதிரியக்கம் இருப்பதை கண்டுபிடித்ததை அடுத்து நாம் அந்த கொள்கலனை ஒதுக்குப்புறமாக வைத்துவிட்டோம் என்று சுங்கத்திணைக்களத்தின் பேச்சாளரும், சட்டத்துறை பணிப்பாளருமான லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

யக்கலையில் உள்ள ஒரு நிறுவனமே இந்த கொள்கலனை ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்துள்ளது. இறக்குமதியாளர்கள் இந்தக் கொள்கலன்களில் வாகனங்களின் உதிரிப்பாகங்கள் மாத்திரமே இருப்பதாக அறிவித்தனர்.இதனை இறக்குமதி செய்தவர்களுக்கு இந்தக் கொள்கலனில் கதிரியக்க சக்தி வாய்ந்த பொருட்கள் இருப்பது தெரியாதிருந்தது என்றும் அவர் கூறினார்.

இதுகுறித்து ஜப்பானில் உள்ள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அது மீண்டும் ஜப்பானுக்கு திருப்பி அனுப்பப்பட்டது என்றார்.

# அனுமதியின்றி வெட்டப்பட்ட பனை சிலாகைகள் மீட்பு

(பளை)

சட்டவிரோதமாக பனைமரங்கள் வெட்டப்பட்டு அவற்றின் சிலாகைகள் கொண்டுசெல்வதற்கு தயாராகவிருந்தபோது, அவற்றினை இயக்கச்சிப் பகுதியில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சுமார் 500,000 இலட்சம் ரூபா பெறுமதியான பனைமரச் சிலாகைகளையே பளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பில் கடந்த சனிக்கிழமை பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து இயக்கச்சி விநாயகபுரம் பகுதிக்குச் சென்ற பொலிஸார் பனைமரச் சிலாகைகளை கைப்பற்றி பளை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

முறையாக அனுமதி பெற்று பனைமரங்கள் வெட்டப்படுவதாக அந்த பிரதேச மக்களிடம் பொய்கூறி ஒருவர் பெருமளவு பனைமரங்களை வெட்டிக்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.


இது தொடர்பில் சந்தேகமடைந்த பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். பொலிஸார் வருவதை அறிந்த சட்டவிரோதமாக பனைமரங்களை தறித்தவர்கள் தலைமறைவாகிவிட்டனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

# முதல் காலாண்டுக்கான மருந்துகள் ஒரே தடவையில் இறக்குமதி

முதல் காலாண்டுக்கு (4 மாதங்கள்) தேவையான அனைத்து மருந்து வகைகளும் ஒரே தடவையில் இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளில் ஏற்படும் மருந்து தட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயிரத்திற்கும் அதிகமான வகை மருந்துகள் ஜனவரி மாதத்தில் இறக்குமதி செய்யப்படும் இந்தியா, பங்களாதேஸ், தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இருந்து இம்மருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# மாலைதீவு சொகுசு விடுதியில் இலங்கையர் சடலமாக மீட்பு



(மாலைதீவு)

மாலைதீவு தலைநகர் மாலேவில் உள்ள சொகுசு விடுதி ஒன்றில் இருந்து இலங்கையர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார.

குறித்த விடுதியில் உலகின் பிரபல் கால்பந்து வீரர் இங்கிலாந்தின் டேவின் பெக்கம் தனது குடும்பத்துடன் கிறிஸ்மஸ் விடுமுறை கழித்து வந்ததாக மாலைத்தீவு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஹசன் ஹனீப் தெரிவித்துள்ளார். இலங்கையரின் மரணத்திற்கான காரணம் குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் இலங்கையர் எனவும் விருந்தினரோ பணியாளரோ இல்லை எனவும் தெரிவிக்கப்படும் அதேவேளை, குறித்த விடுதியில் மற்றுமொரு பிரபல கால்பந்து வீரர் ரோமன் அப்ரமோவிச் என்பவரும் இருந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

பல வருடங்களின் பின் தனது மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளுடன் மாலைதீவுக்கு விஜயம் செய்துள்ள டேவிட் பெக்கம், சடலம் மீட்பு சம்பவத்தால் அதிருப்தி அடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆடைத்தொழிற்சாலையில் தீ

கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் நேற்றுமுன்தினமிரவு 9 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தில் குறித்த ஆடைத் தொழிற்சாலைக்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. கொழும்பு, கொட்டாஞ்சேனை - பரமானந்த விகாரை மாவத்தையில் உள்ள ஆடைத் தொழிற்சாலையிலேயே இத்தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை பொலிஸார மற்றும் கொழும்பு தீயணைப்புப் படையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் குறித்து கொட்டாஞ்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

15) ஒழுங்கற்றிருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.
1. பணத்தை / கண்மூடித்தனமாக / செய்யாதே / செலவு / வீணே
..........................................................................................
2. அவதானிக்கும் / அவன் / ஒரே / நூறு / நேரத்தில் / விடயங்களை / உடையவன் / ஆற்றல்
..........................................................................................

16) கீழ்வரும் மரபுத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.
1. தலைக்கனம் : ..........................................
2. காது கொடுத்தல் : ..........................................

17) பின்வரும் தனிவாக்கியங்களை தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.
1. மயூரன் நன்றாக பாடல் பாடுவான்
2. கண்ணன் நன்றாகப் பாடல் பாடுவான்
..........................................................................................

18) வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
1. மே மாதம் 1 ஆம் திகதி .................................. தினம்
(தொளிலாழிகள் / தொலிளாழிகள் / தொழிலாளிகள்)
2. மக்கள் கள்வனை .................................. காட்டினர்
(அடயாளம் / அடையாளம் / அடையாலம்)

19) ஒவ்வொரு தமிழ்ச் சொற்களுக்குமான பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
1. பென்சில் .................................. 3. அலுவலகம் ..................................
2. பலூன் ..................................

20) பின்வரும் வசனங்களுக்குரிய கருத்தினைத் தமிழில் எழுதுக.
1. can I help you? ..................................
2. please give me a book ..................................
3. I want to rest ..................................
4. what are you doing? ..................................

21) பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் தமிழ்க் கருத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
1. .................................. ஒபட ஒன மொனவத?
2. .................................. மட்ட தே ஓனே?
3. ..................................மகே பொத்த் கோயித?

22) பின்வரும் தமிழ்ச் சொற்களை சிங்களத்தில் எழுதுக.
1. சொல்லுங்கள் : ..................................
2. உங்கள் பெயர் என்ன? : ..................................
3. சாப்பிட்டீங்களா? : ..................................

23) பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
01. பின்வரும் விதைகளில் எவ்விதை சிறியது?
1. பலாவிதை 2. மிளகு 3. ஆலம்விதை
02. இலங்கையின் தேசிய மரம்
1. நாகமரம் 2. நாவல்மரம் 3. வேப்பமரம்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1மணி 15 நிமிடம்




# கல்வி முரசு


இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

1) கீழே தரப்பட்டுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள தாவரம் எது?

உணவாகப் பயன்படும் தாவரம். ஆணிவேரில் உணவு சேமிக்கும் இதிலிருந்து சீனி உற்பத்தி செய்யப்படும்.




2) கீழே தரப்பட்டுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விளையாட்டு எது?





இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வெளியக விளையாட்டு, ஓர் அணியில் 11 வீரர்கள் விளையாடுவர். இலங்கையில் மிகப் பிரபலமான விளையாட்டு.


3) தரப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.



உருக்களுக்கு இடையிலான தொடர்பை சரியாகக் காட்டும் விடையின் கீழ்க்கோடிடுக.

1) 

2) 

3) 

பின்வரும் பாடலை வாசித்து விடை தருக.

> நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
> கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
> ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
> நீர் மேல் எழுத்துக்கு நேர்.

4) பாடலில் நல்லார் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யார்? ..................................
1) மிகவும் வறுமையில் வாடும் ஒருவர். 2) நற்குணங்கள் உடைய ஒருவர்.
3) பிறருக்கு உதவி செய்யும் ஒருவர்.

5) இப்பாடலில் வரும் கல்மேல் எழுத்துப்போல் என்ற தொடரின் கருத்து யாது?

1) கல்லில் செதுக்கப்பட்ட எழுத்து. 2) என்றும் அழியாது நிலைத்திருக்கும்.
3) கல்லின் மேல் எழுதுவதைக் குறிக்கும்.

6) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் பொருத்தமற்றதைத் தெரிவு செய்க.

1)  2)  3) 

பின்வரும் விலைப்பட்டியலை வாசித்து விடை தருக.

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| A - சீனி | ஒரு கிலோ கிராம் | 52.00 |
| B - பருப்பு | 500 கிலோ கிராம் | 45.00 |
| C - தேயிலை | 250 கிலோ கிராம் | 100.00 |
| D - கடலை | ஒரு கிலோ கிராம் | 78.00 |
| E - மாசி | 100 கிராம் | 45.00 |

7) பொருட்களின் விலைகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் விடை எது?

1) ABDCE 2) ECBDA 3) ECDBA

8) விலைப்பட்டியலிலுள்ள ஒவ்வொரு பொருளையும் ஒரு கிலோகிராம் வீதம் கொள்வனவு செய்ய எவ்வளவு பணம் தேவைப்படும்?

1) ரூபா 968.00 2) ரூபா. 1031.00 3) ரூபா 1070.00

9) எதிர்ச்சொல் தருக.

1. ஆக்கம் :..............................
2. ஏறி :..............................
3. வெளியே :..............................

10) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. Snake :.................... 2. Library :....................
3. Crow :.................... 4. Hospital :....................

**பின்வரும் பொருட்களுள் நீரில் கரையும் பொருட்கள், நீரில் கரையாத பொருட்கள் என வகைப்படுத்துக.**
(மண்ணெண்ணெய், வினாகிரி, உப்பு. தேங்காயெண்ணெய், டீசல், குளோரின், சவர்க்காரம்)

| நீரில் கரையும் பொருட்கள் | நீரில் கரையாத பொருட்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |



**11) சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

1. ஆணிவேர்த் தாவரம் கிளைகளைக் கொண்டது ஆகும். (....................)
2. மழை காலங்களில் காலையில் சூரியன் உதயமாகும்போது மேற்குத் திசையில் வானவில் தோன்றும். (....................)
3. சிலந்தி தனது வலையைத் தனது எச்சிலினால் பின்னும். (....................)
4. மர அணில் இலங்கைக்கு உரித்தான விலங்கினம் அல்ல. (....................)
5. ஆயிரம் ரூபாய் நாணயத்தாளின் நிறம் பச்சை ஆகும். (....................)

**12) பின்வரும் வினாக்களுக்குரிய விடை தருக.**

1. கம்மாலையில் நெருப்பு எரியக் காற்று வழங்கும் உபகரணம்
..............................
2. தலதா மாளிகை அமைந்துள்ள இடம்
..............................
3. தோற் கருவிகள் இரண்டைக் குறிப்பிடுக.
..............................
4. இரை மீட்கும் பிராணி ஒன்றைத் தருக.
..............................
5. தச்சன் பயன்படுத்தும் உபகரணங்கள் 2 ஐக் குறிப்பிடுக.
..............................

13)

**தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. ஆடை நெய்பவன் | குயவன் |
| 2. நகை வேலை செய்பவன் | கொல்லன் |
| 3. சட்டி, பானை செய்பவன் | நெசவாளி |
| 4. கத்தி, கோடரி செய்பவன் | விவசாயி |
| 5. மரத்தளபாடம் செய்பவன் | பொற்கொல்லன் |
| 6. வயலில் வேலை செய்பவன் | மேசன் |
| 7. கட்டட வேலை செய்பவன் | தச்சன் |

14)

01. 10000, 1000, 100, 10,.............................. எனும் எண்கோலத்தில் அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதுக.

01. 00:12 மணியை சாதாரண கடிகார நேரத்தில் எழுதுக.
..............................


02. பென்சிலொன்றின் விலை ரூபா 5.75 ஆகும். அழிறப்பர் ஒன்றின் விலை ரூபா 2.25 ஆகும். அதன்படி, அவ்விரண்டினதும் விலைகளின் கூட்டுத்தொகை யாது?
..............................

03. பொதுவித்தியாசம் 8 ஆகவுள்ள எண்கோலமொன்றை எழுதுக.
..............................

04. தாயக்கட்டை ஒன்றின் ஒருபக்க நீளம் 1 சென்ரிமீற்றர் ஆகும். அதன்படி அத்தாயக்கட்டையின் அனைத்து முகங்களினதும் பரப்பளவு யாது?
..............................

# இரணைமடு இயற்கைச் சமன்பாட்டை மாற்றியமைக்க முயன்றால் விளையும் விபரீதம்

*நேற்றைய தொடர்ச்சி......*



யாழ்ப்பாண சனத்தொகை அதிகரிக்கும் போது அவர்களின் வாழ்வாதாரத்தை நோக்கிய குடிப்பெயர்வானது கிளிநொச்சி நோக்கியே இருந்தது. அத்துடன் தற்போது கிளிநொச்சியை அண்டிய பகுதியில் ஏற்படுத்தப்படும் பௌதீக கட்டுமானங்களான யாழ்.பல்கலைக்கழக பொறியியல்பீடம், விவசாயபீடம், மாங்குளத்தில் அமையவுள்ள வடமாகாண தலைமைச் செயலகம் முன்மொழியப்படுகின்ற வர்த்தக வலயங்கள் என்பவற்றால் எதிர்காலத்தில் சனத்தொகையின் மையவிசைப்புள்ளியாக கிளிநொச்சியும் அதனை அண்டிய பகுதிகளுமே காணப்படப் போகின்றன இந்நிலையில் கிளிநொச்சியின் வடக்கே ஆனையிறவு, தெற்கே மாங்குளம், கிழக்கே கல்லாறு, சுண்டிக்குளம், மேற்கே பூநகரி, உள்ளடங்கிய பெருநிலப்பரப்பு பிரதேசங்களுக்கு எதிர்காலத்தில் சனத்தொகையின் மையவிசைப்புள்ளியாக கிளிநொச்சியும் ஒரேயொரு குடி நீருக்கான மூலவளம் இரணைமடுக்குளம் மட்டுமேயாகும். இப்பிரதேசங்களில் நிலத்தடி நீருக்கான பாறை அமைப்புகளும் [illegible]கமற்ற நிலையில் காணப்படுவது [illegible]றிப்பிட வேண்டியுள்ளது.

எதிர்காலத்தில் குழாய் நீர் பயன்பாட்டிற்கு பழக்கப்பட்டவுடன் நிலத்தடி நீரின் பயன்பாடு அற்றுப்போவதுடன் நீர்த்தட்டுப்பாடும் வறட்சியும் ஏற்படும் போது ஒரே வம்சாவழிகளான எமக்குள் பிரதேசவாத உணர்வுகளையும் உள்ளக முரண்பாடுகளையும் உருவாக்கி வன்முறைக்கலாசாரத்தை தோற்றுவிக்கலாம் என அஞ்சவேண்டியுள்ளது.

எமது மூதாதையர்கள் பல பிரதேசங்களில் இருந்து வந்து குடியேறி மலேரியாவிற்கும் காட்டுவிலங்குகளிற்கும் இன்னும்பல கொடிய நோய்களிற்கும் தமது உறவுகள் பலரைப் பறிகொடுத்து தமது கரங்களைக் கொண்டு காடழித்து கழனியாக்கிய வயல்நிலங்கள் இத்திட்டத்தின் மூலம் மீண்டும் புதர் [illegible]ண்டிவிடவேண்டிய சூழ்நிலை உரு[illegible]க்கப்படுவதுடன் இரணைமடு விவசாயிகளை மீண்டுமொரு வாழ்வாதாரத்தை நோக்கிய குடிப்பெயர்விற்கு இந்நிலை இட்டுச்செல்லலாம்.

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் நிறைவேற்றுப்பணியில் பங்கேற்று எமது விவசாய வாழ்வில் பங்காற்றியவர்கள் யாழ்ப்பாணத்திற்கான உணவுப்பாதுகாப்பை உருவாக்கியவர்கள் அன்றைய பொறியியலாளர்கள் இவர்கள் எந்த இனம் எந்த மொழி எந்தச் சாதி என்பதைப் பார்க்காமல் ஆதிக்கவாதிகளாக இருந்தாலும் சரி எமர்சன் வீதி,வில்சன் வீதி கொன்றிப்பாக்க வீதி, ஆறுமுகம் வீதி பாதசுந்தரம் வீதி, சில்வா குணசேகர வீதி, றோஸ் வீதி, ரோட்றிக்கொ வீதி என்றெல்லாம் எமது பிரதான வீதிகளுக்கெல்லாம் அவர்களின் நாமங்களை வைத்து எமது விவசாயிகள் போற்றி வருகிறார்கள் ஆனால் இன்றைய அதிகாரிகள் இரணைமடு நீர்ப்பாசனத்திட்டத்தின் நோக்கத்தையே மாற்ற முயல்வது ஏனென்று தெரியாமல் இருப்பதுடன் எம்மை மிகவும் வேதனை கொள்ளச் செய்கின்றது.

இரணைமடுக்குளமும் விவசாய நடவடிக்கையும் இல்லாத கிளிநொச்சி மாவட்டத்தை யாராலும் நினைத்துப் பார்க்க முடியுமா?

பச்சைப் பசேல் வயல் நிலங்களை நினைத்துப்பார்க்காமல் இருக்கமுடியுமா?

யுத்தகாலத்தில் இரணைமடு நீர்ப்பாசனத்திட்டத்தின் உணவுப்பங்களிப்பு எவ்வாறுமுக்கியமானதாக அமைந்து இருந்தது. மற்றும் 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வின்போது அனைவருக்கும் உணவு வழங்கியது எது? A9 வீதி மூடப்பட்டு கிளிநொச்சி தொடர்பற்று இருந்த போது யாழ்ப்பாணத்தில் அரிசி விலை என்ன என்பவற்றை அனைவரும் சிந்திக்கும்படி கேட்டு நிற்கின்றோம்

குறிப்பு:-எந்தவொரு பாரிய திட்டத்தின்போதும் சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை பெறப்பட வேண்டும். இதன்போது சமூக மட்ட தாக்கம் பற்றி ஆராயப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். சமூக அமைப்புக்கள் மக்களின் கருத்துக்கள் பெறவேண்டும் மக்களுக்கும் அமைப்புக்களுக்கும் பூரண விளக்கம் வழங்கப்படவேண்டும். ஆனால் இந்தத்திட்டம் தொடர்பாக எதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

**அப்படியானால் யாழ்ப்பாண மக்களுக்கு சுத்தமான குடிநீர் எவ்வாறு பெறலாம் என்று கேட்கலாம்? எமக்கு தெரிந்த சிலமுன்மொழிவுகளை நாங்கள் இங்கே தருகின்றோம்**

யாழ்ப்பாண குடாநாட்டில் நிலக் கீழ் அமைப்பானது சுண்ணாம்புக் கற்பாறைகளினால் ஆனது இதனிடையே துளைகளின் நீர்க்கொள்ளளவானது பல இரணைமடுக்குளத்தைப்போன்றது எனக் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் சராசரி மழை வீழ்ச்சியானது ஆண்டிற்கு 1500 மில்லிமீற்றர் ஆகக் காணப்படுவதுடன் இதில் சுமார் 30 வீதமான நீரே நிலத்தின் கீழ் உறிஞ்சப்பட்டு சுண்ணாம்புக்கற்களுக்கிடையே மீழ் நிரப்புகைக்கு உட்படுகின்றது. எமது முன்னோர்களால் பண்டைய காலம் தொட்டு சிறு சிறு குளங்கள் தடுப்பணைகள் உவர் நீர் தடுப்பணைகள் என்பன அமைக்கப்பட்டிருந்தன ஆனால் தற்போது இவையனைத்தும் பாழடைந்து பராமரிப்பற்ற நிலையில் காணப்படுவதுடன் கடந்த தசாப்தங்களாக புதிய சிறிய குளங்கள் அமைக்கப்படவும் இல்லை என்பது உண்மையாகும் எனவே யாழ்ப்பாணத்திற்கு வருடந்தோறும் கிடைக்கும் மழை நீர் நிலத்தடி நீராக உச்சத்தன்மையில் மீழ் நிரப்புகைக்கு உட்படுத்தும் வகையில் சிறு குளங்கள் மற்றும் தடுப்பணைகள் புனரமைக்கப்படுவதுடன் புதியவையும அமைக்கப்படவேண்டும். இது சம்மந்தமான "ஆய்வுகளும் அபிவிருத்தி நடவடிக்கைகளும்" மேற்கொள்ளப்படவேண்டும் மேலும் மழை நீரின் உச்சப்பயன்பாட்டை பெறும் விதத்தில் யாழ்ப்பாணத்தில் காணப்படும் பொதுக்கட்டடங்கள், பாடசாலைகள், கோவில்கள் மற்றும் வீடுகள் என்பவற்றின் தேவைக்கேற்ப நிலத்தின் கீழ் மற்றும் நிலத்தின் மேலான மழை நீர் சேமிப்பு தாங்கிகள் அமைக்கப்படவேண்டும்.

**யாழ்.குடாநாட்டிற்கான ஆற்றுத்திட்டம்**

எமது நீரியல் பொறியியல் முன்னோடி எந்திரி எஸ்.ஆறுமுகம் அவர்கள் யாழ்ப்பாண நீர்ப்பிரச்சினைக்குத் தீர்வாக யாழ்ப்பாணத்துக்கான ஆறு என்ற திட்ட முன்மொழிவைத்தந்துள்ளார்.

(இது சம்மந்தமாக ஆய்வு அறிக்கைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

தொடரும்.....

# வடக்கில் 71,716 ஹெக்டேயரில் கரும்பு உற்பத்திக்கு நடவடிக்கை

வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் 71 ஆயிரத்து 716 ஹெக்டேயர் காணிகளில் கரும்புப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன இந்த அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பிக்க உள்ளார். நாளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடும் அமைச்சரவையில் இதுகுறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கரும்புச் செய்கையை அதிகரித்து சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்காக நாடுதழுவிய ரீதியில் ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 801 ஹெக்டேயர் காணி இந்தத் திட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்படவுள்ளது. இதில் வடக்கில 71ஆயிரத்து 716 ஹெக்டேயர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க அமைச்சரவைப் பத்திரம் ஏற்கனவே அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்னவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சர்களின் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. இதனையடுத்தே நாளை மறுதினம் திகதி இறுதி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப் பிககப்படவுள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தில் கரும்பு பயிர்ச்செய்கைக்காக அரசுக்குச் சொந்தமான 109,801ஹெக்டேயர் காணிகள் சுவீகரிக்கப்படும். 99 வருட குத்தகையின் அடிப்படையில் இந்தக் காணிகள் அமைச்சினால் கரும்பு உற்பத்திக்காக பகிர்ந்தளிக்கப்படும். இதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க வவுனியா மாவடடத்தில் வவுனியா, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, செட்டிகுளம், ஓமந்தை, கனகராஜன் குளம், நயினமடு, தந்திரிமலை ஆகிய பகுதிகளில் 42 ஆயிரத்து 111 ஹெக்டேயர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டு-சுட்டான், மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் 24 ஆயிரத்து 340 ஹெக்டேயர் காணிகளும் மன்னார் மாவட்டத்தில் மடு, மாந்தை தெற்கு ஆகிய பகுதிகளில் 5185 ஹெக்டேயர் காணிகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் பகுதியில் 80 ஹெக்டெயர் காணிகளும் சுவீகரிக்கப்படவுள்ளன.

## வீதியில் விழுந்து மரணம்

மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னார் வீதியில் உள்ள மைல் கல்லுக்கருகில் நபர் ஒருவர் விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 119 என்ற பொலிஸ் அவசர அழைப்பு பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்தே இந்நபர் மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை அந்நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சீப்புக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான நபர் ஒருவரே உயிரிழந்தவராவார்.

# பாடசாலை உபகரணங்கள் வழங்கல்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள வழங்கும் நிகழ்வு மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் பிரபல வர்த்தகரும் சமூக ஆர்வலருமான இருதயநாதன் சாள்ஸினால் இவ் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார், மாந்தைமேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீள் குடியேற்றக்கிராமங்களான சன்னார், ஈச்சலவக்கை, பெரியமடு ஆகிய மூன்று கிராமங்களுக்கு நேற்று முன்தினம் விஜயம்செய்த இவர், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார்.மேற்படி மாணவர்கள் தமது பாடசாலை கல்வி கற்றலுக்குத் தேவையான உபகரணங்களின்றி பல்வேறு அசெள்கரியங்களை எதிர்கொள்வதாக கேள்வியுற்ற இவர் ஏற்கனவே அக்கிராமங்களுக்கு விஜயம் செய்து மாணவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்து கொணடதுடன் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்தி ருந்தார்.

இதற்கமைவாக நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு விஜயம் செய்த அவர் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை கையளித்துள்ளார்.

இதன்போது, சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் சன்னார் கிராமத்தைச் சேர்ந்த 350 மாணவர்களுக்கும் ஈச்சலவக்கை கிராமத்தைச் சேர்ந்த 120 மாணவர்களுக்கும் பெரியமடு கிராமத்தைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

# தீவிரவாதிகள் - இராணுவம் மோதல்;
# கொங்கோவில் 46பேர் பலி

ஆபிரிக்க நாடான கொங்கோவில் இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 46பேர் பலியாகியுள்ளனர்.

ஆபிரிக்க நாடான கொங்கோவில் பல தீவிரவாத அமைப்புகள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டுள்ளன. இதனால் அங்கு அரசியல் ஸ்திரத்தன்மை இன்றி உள்ளது.

வன்முறை தாக்குதல்களால் இதுவரை சுமார் 25 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் தாக்குதல்களால் மக்கள் பசி, பட்டினி மற்றும் நோயால் அவதிப்படுகின்றனர். எனவே, அங்கு ஐ.நா. சபையின் அமைதிப்படையைச் சேர்ந்த 21 ஆயிரம் பேர் முகாமிட்டுள்ளனர்.

இந்த நிலையில் தலைநகர் இன்ஷாசாவில் நேற்றுமுன்தினம் விமான நிலையம், இராணுவ வீரர்கள் குடியிருப்பு மற்றும் அரசின் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் அதிபர் ஜோசப் கமிலாவுக்கு எதிராக் செயற்படும் கிறிஸ்தவ தலைவர் பால் ஜோஸ் முழுங்குபிலா தலைமையிலான தீவிரவாதிகள் ஈடுபட்டனர். மேலும் அரசுக்கு சொந்தமான வானொலி, தொலைக்காட்சி மற்றும் டெலிவிஷன் நிலையங்களை கைப்பற்றினர். இதனால் காலை 8 மணி முதல் அவை மூடப்பட்டன. அங்கு அதிபருக்கு எதிராக கோஷங்களை முழங்கிக் கொண்டே இருந்தனர். அங்கு பணியில் இருந்த பல நிருபர்களை கைதிகளாக பிடித்து வைத்திருந்தனர்.

தகவல் அறிந்ததும் கொங்கோ நாட்டு இராணுவத்தின் அதிரடிப் படை அங்கு திடீரென புகுந்து தாக்குதல் நடாத்தியது. பதிலுக்கு தீவிரவாதிகளும் தாக்கினர்.

அதில் 46 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் 20 பேர் கைது செய்யப்பட்டனர். இதற்கிடையே சாத்ஷி இராணுவ முகாம் மற்றும் இராணுவ தலைமைஅலுவலகம், இராணுவ வீரர்கள் குடியிருந்த சர்வதேச விமான நிலையம் ஆகிய இடங்களிலும் தீவிரவாதிகளின் மற்றொரு பிரிவு தாக்குதல் நடாத்தியது.

விமான நிலையத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஐ.நா. சபை ஊழியர் ஒருவர் காயமடைந்தார்.

உலகச் செய்திகள்

# பிரதமர் வேட்பாளரை காங்கிரஸ் அறிவிக்க வேண்டும்



காங்கிரஸ் கட்சி பிரதமர் வேட்பாளரை அறிவிக்க வேண்டும் என்று இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'காங்கிரஸ் கட்சி தனது பிரதமர் வேட்பாளரை முன்னிலைப்படுத்துவது அவசியம் என்பது எனது தனிப்பட்ட கருத்து. இது குறித்து கட்சிதான் முடிவு செய்ய வேண்டும்' மாநிலத் தேர் தலோ அல்லது மக்களவைத் தேர்தலோ, மக்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் கட்சியின் தலைவர் யார் என்பதை அறிவதில் ஆர்வத்துடன் உள்ளனர் என்றார்.

பா.ஜ.க. தனது பிரதமர் வேட்பாளராக நரேந்திரமோடியை அறிவித்ததைத் தொடர்ந்து, காங்கிரஸும் தனது பிரதமர் வேட்பாளரை அறிவிக்க வேண்டிய நெருக்குதலில் இருக்கிறது. நான்கு மாநிலத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து, உரிய நேரத்தில் காங்கிரஸின் பிரதமர் வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என்று அக்கட்சியின் தலைவர் சோனியாகாந்தி தெரிவித்திருந்தார்.

அதேவேளையில், ஜனவரி 17ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்திந்திய காங்கிரஸ் குழுக் கூட்டத்தில், காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதாக டில்லி வட்டாரங்கள் கூறுகின்றன. ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலரும் பகிரங்கமாக விருப்பம் தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# உணவகங்களில் வரிசையில் நின்று சீன ஜனாதிபதி ஆய்வு



சீனாவின் ஜனாதிபதி ஸி ஜிஙபிங், ஹோட்டலில் வரிசையில் நின்று சாப்பிட்டது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங், பெய்ஜிங் நகரில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் நேற்றுமுன்தினம் திடீரென ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது ஹோட்டல் ஒன்றுக்கு சென்றவர் அங்குள்ள உணவு வகைகளை சாப்பிட விரும்பினார்.

அங்கு கூட்டம் அதிகமாக இருந்ததுடன், மக்கள் வரிசையில் நின்று உணவுகளை வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

எனவே ஜனாதிபதியும் வரிசையில் நின்று உணவுகளை வாங்கி ருசி பார்த்தார்.

பன்றி இறைச்சியால் தயாரிக்கப்பட்ட ரொட்டி வகைகள், வெங்காய பன் ரொட்டிகள், பச்சை காய்கறிகள், வறுத்த ஈரல், போன்றவற்றை வாங்கிச் சாப்பிட்டவர், அதற்கான பணத்தையும் கொடுத்து விட்டுச் சென்றுள்ளார். ஜனாதிபதியின் இச் செயற்பாட்டுக்கு பலரதுபாராட்டுக்களும் குவிந்த வண்ணமுள்ளன.

# பா.ஜ.க.வில் நிபந்தனையின்றி எடியூரப்பா இணைவு



பா.ஜ.க. தலைமையின் தொடர வேண்டுகோளை ஏற்று, சங்கராந்தி பண்டிகைக்கு பிறகு மீண்டும் அக்கட்சியில் இணையவுள்ளேன். இதற்காக எந்தவிதமான நிபந்தனையையும் நான் விதிக்கவில்லை என கர்நாடக ஜனதா கட்சியின் தலைவரும், அந்த மாநிலத்தின் முன்னாள் முதல்வருமான எடியூரப்பா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கர்நாடக ஜனதா கட்சியின் பொதுக்கூட்டம், ஷிமோகா மாவட்டத்தில் உள்ள ஷிகாரிபுராவில் நடைபெற்றது.

திங்கள்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் பேசிய எடியூரப்பா, 'என்னை மீண்டும் பாரதிய ஜனதாக் கட்சியில் இணையுமாறு, அக்கட்சியின் தேசியத் தலைவர்களும், கர்நாடகத்தில் உள்ள முக்கிய தலைவர்களும் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகின்றனர்.

கடந்த வாரம் அக் கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங் என்னை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தார். அவரிடம், 'நரேந்திர மோடியை பிரதமராக்க வேண்டும் என்பது எனது குறிக்கோள். எனவே, உங்களுடைய வேண்டுகோளை ஏற்று மீண்டும் பாரதிய ஜனதா கட்சியில் இணைகிறேன்' என்று தெரிவித்தேன்.

எனது சொந்த ஊரான ஷிகாரிபுராவில் நடைபெறும் இந்தக் கூட்டம் தான், கர்நாடக ஜனதா கட்சியின் கடைசிக் கூட்டம் என நினைக்கிறேன். சங்கராந்திக்கு (பொங்கல்) பிறகு, பா.ஜ.க.வில் மீண்டும் இணைய முடிவெடுத்துள்ளேன். எனது அன்பான வேண்டுகோளை ஏற்று கர்நாடக ஜனதா கட்சியின் முக்கியத் தலைவர்களும், செயல் வீரர்களும் என்னோடு சேர்ந்து பா.ஜ.க.வில் இணைய சம்மதம் தெரிவித்துள்ளார்கள் என்றார்.

# 70 ஊடகவியலாளர்கள் 2013இல் படுகொலை

(நியூயோர்க்)

உலகளவில் 2013ஆம் ஆண்டு 70 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு என்ற அமைப்பு 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு பணியின் போது கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் குறித்து இச்சங்கம் ஆய்வு நடாத்தியது. அதில், சர்வதேச அளவில் 70 பேர் கொல்லப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இவர்களில் மூன்றில் இரண்டு மடங்கு பேர் மத்திய கிழக்கு நாடுகளான பாகிஸ்தான், சோமாலியா, இந்தியா, பிரேசில், பிலிப்பைன்ஸ், நாடுகளில் கொலை செய்யப்பட்டுள்னர்.

இதில் பாகிஸ்தான் மற்றும் சோமாலியாவில் தான் அதிகம் பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர். பாகிஸ்தானில் மட்டும் 5 பேர் கொலையுண்டிருக்கின்றனர்.

தற்போது உள்நாட்டு போர் நடைபெற்று வரும் சிரியாவில் 29 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் லெபனான் மற்றும் துருக்கி எல்லையில் உயிரிழந்துள்ளனர். பணியின் போது கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களை பொறுதத வரை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இறந்தவர்களின் எண்ணிக்கை குறைவாகும். ஏனெனில் கடந்த ஆண்டு 74 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

# தந்தையின் ஆசையை நிறைவேற்றிய மகனுக்கு அபராதம் விதிப்பு



சீனாவில் இருக்கும் சட்டத்தை மீறி மூன்று குழந்தைகள் பெற்ற சினிமா இயக்குனருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சீனாவில் பிரபல திரைப்பட இயக்குனரான ஷாங் யிமோவ் என்பவர், பிரபல மொடல் சென் திங்கை திருமணம் செய்துள்ளார்.

இவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன, சீனாவில் உள்ள சட்டப்படி இது தவறாகும்.

அப்படி பெற்றுக் கொண்டால், பெற்றோரின் வருமானத்தை கணக்கிட்டு அதனடிப்படை யில் அபராதம் விதிக்கப்படும். இதுகுறித்து விசாரணை நடத்திய மக்கள்தொகை அதிகாரிகள், சட்டத்தை மீறி 3 குழந்தைகள் பெற்ற ஷாங் யிமோவுக்கு இலங்கை ரூபாவின் மதிப்பில் 15 கோடி ரூபா அபராதம் விதித்தனர்.

ஆனால் சென் திங் கோ, தனது தந்தை இறக்கும் போது, நிறையக் குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என கூறியதாகவும், அவரது ஆசையை நிறைவேற்றுவதற்காக மூன்று குழந்தைகள் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# வாக்குறுதிகளை நிறைவேற்ற யாகம்



இந்தியாவில ஆம் ஆத்மி கட்சி சார்பில் டில்லி மக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற கடவுளின் அருளைப் பெறும் வகையில் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவாலின் தந்தை கோவிந்த் ராம், அங்குள்ள கோவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பு யாகத்தை நடாத்தியுள்ளார்.


ஓய்வுபெற்ற அரசஅதிகாரியான கோவிந்த் ராம் கேஜ்ரிவால், தனது பகுதியில் வசிக்கும் மக்களு டன் கோவிலுக்குச் சென்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வழிபாடு மேற்கொண்டார். ஆம் ஆத்மி கட்சியின் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற வேண்டுதலுடன் யாகம் நடைபெற்றது.

அதன் பின் செய்தியாளர்களிடம் கோவிந்த் ராம் கேஜ்ரிவால் தெரிவிக்கையில், அர்விந்த் கேஜ்ரிவால் மிகச் சிறந்த மனிதர். எங்கள் மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார். அவர் வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது எல்லாம் எனது காலில் விழுந்து ஆசி பெறாமல் செல்ல மாட்டார்.

முதல்வரான பின்பும், ஆசி பெறும் பழக்கத்தை அவர் விடவில்லை. முதல்வரான பின்பு அவரின் நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் இல்லை.

எப்போதும் போலத்தான் உள்ளார். எனது மகனுக்கு தீவிர கடவுள் பக்தி உண்டு. சவால்கள் அனைத்தையும் கடவுளின் துணையுடன் அவர் எதிர்கொள்வார் என்றார்.

# மின்விநியோக விஸ்தரிப்பு வேலணையில் மும்முரம்



கடந்த பல வருடங்களாக வேலணை பிரதேசத்தில் இருளில் மூழ்கிக்கிடந்த கிராமங்களுக்கு ஒளியூட்டும் நடவடிக்கையினை வேலணைப்பிரதேச சபையின் தவிசாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா ( போல் )வின் கோரிக்கைக்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற வரிசையில் தற்போது வேலணை சோளாவத்தைப் பிரதேசத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்னிணைப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது இவ்வேலைகளை வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் நேரடியாகப் பார்வையிட்டார்.

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

வடக்கு கடல்பகுதியில் கைது செய்த இந்திய மீனவர்கள் 50 பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்தியா புதுக்கோட்டை, ஜனதாப்பட்டினம் மற்றும் கோட்டைப் பட்டிணம் ஆகிய பகுதிகளிலிருந்து 8 படகுகளில் வந்த 30 மீனவர்கள் யாழ். அனலைதீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட வேளையில் கடற் படையினரால் கடந்த டிசம்பர் 11ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன், இந்தியா புதுக்கோட்டை ஜனதாப்பட்டினம் பகுதியிலிருந்து ஐந்து படகுகளில் வந்த 20 மீனவர்கள் கடந்த நவம்பர் 20ஆம் திகதி காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். மேற்படி 50 மீனவர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மீண்டும் நேற்று நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது குறித்த 50 மீனவர்களையும் எதிர்வரும் ஜனவரி 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# றெக்கியன் கொலை வழக்கு 9ஆம் திகதி வரை ஒத்திவைப்பு

## விளக்கமறியலும் நீடிப்பு

றெக்கியன் கொலை வழக்கின் சந்தேக நபர்களான வட மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் கந்தசாமி கமலேந்திரன் உட்பட மூவரையும் எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷியன் கொலை விவகாரம் தொடர்பில் கமலேந்திரன், றெக்ஷியனின் மனைவி மற்றும் இளைஞன் ஒருவன் கைதுசெய்யப்பட்டு கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய போது அவர்களை நேற்று 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் ஊர்காவற்றுறை நீதவான் எஸ்.எம்.ஆர்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்திய மூவரையும் எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜராகவேண்டிய சட்டத்தரணிகள் மன்றில் நேற்று ஆஜராகாமையை அடுத்தே இந்தவழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# சூரிய கிரகணம் இலங்கையிலும் பார்க்கலாம்

இந்த மாதம் முதல் வாரத்தில் சூரிய கிரகணம் ஏற்படும் என இலங்கை வானியல் ஆய்வாளர் அனுர சி. பெரேரா தெரிவித்தார்.

இலங்கைக்கு மிக நெருக்கமாக தற்போது சூரியன் பயணிப்பதனால் சூரிய கிரகணத்தை விரைவில் எதிர்பார்க்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

இச்சூரிய கிரகணமானது, உலக காலநிலையில் மாற்றங்களை ஏற்படுத்துமென்பதுடன், பூமியின் ஒரு பகுதி மழையுடன் கூடிய காலநிலையையும் மற்றைய பகுதி வறட்சியுடன் கூடிய காலநிலையையும் கொண்டதாக இருக்குமென சி. பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார். ஜனவரி 14 மற்றும் 15 ஆகிய தினங்களில் ஐசோன் விண்கற்கள் சூரியனுக்கு நெருக்கமாக பயணிப்பதனால் விண்கற்கள் வெடித்து எஞ்சிய பகுதியை காணக்கூடிய நிலையும் உருவாகுமென ஆய்வாளர் அநுர சி.பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

# சூடானில் இருந்து இலங்கையர் மூவர் நாடு திரும்பினர்

தென் சூடானில் மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், உகண்டாவில் தஞ்சமடைந்திருந்த இலங்கையர்களில் மூவர் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

நாடு திரும்பியவர்களுக்கான விமானச் சீட்டுகள், அவர்கள் பணிபுரிந்த நிறுவனத்தின் தலைவரால் வழங்கப்பட்டதாக, ஹோட்டல் பொது முகாமையாளரான ஜகத் டி சில்வா தெரிவித்துள்ளார்.

வத்தளை, அம்பலாங்கொடை மற்றும் கெஸ்பேவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இதற்கிடையில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய தெரிவிக்கையில்:

தென் சூடானில் இருந்த மேலும் இரண்டு இலங்கையர்கள் உகாண்டா வந்துள்ளனர் என்று தகவல் கிடைத்தது என்றார்.

உகண்டாவில் மீதமுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் யார்? வலி. வடக்கில் நேற்றும் அமளி

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளரின் செயற்பாடுகள் காரணமாக நேற்று இடம்பெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் பெரும அமளி ஏற்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன் தலைமையில் இக்கூட்டம் ஆரம்பமானது.

வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் நானே என பிரதேச சபையின் உபதவிசாளர் சஜீவன் போலியாக கூறிவருகின்றார். உண்மையில் இந்தச் சங்கத்தின் தலைவர் யார்? என பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் ப. உதயகுமார் கேள்வி எழுப்பினார். இதன்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களான முருகேசு மற்றும் தங்கராசா ஆகியோர் உப தவிசாளரின் போலியான செயற்பாட்டை கண்டித்ததுடன் இடம் பெயர்ந்தவர்களை வைத்து அரசியல்பிளைப்பு நடத்த வேண்டாம் எனவும் கூறினார்.

இந்த நிலையில் உபதவிசாளர் சஜீவன் சபை ஒழுங்கு விதிகளை மீறி மேற்படி உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து கோபமாக கூச்சலிட்டார்.

உபதவிசாளரின் இந்தச் செயற்பாட்டை சபை உறுப்பினர்கள் அனைவரும் வன்மையாகக் கண்டித்ததுடன் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் கூறினர் உபதவிசாளரின் சார்பாக தவிசாளர் சுகிர்தன் மன்னிப்புக் கோரி சபையை கட்டுப்படுத்தினார்.

---

### புதுவிடியல்....

காலத்தைப் படைக்கும் படிப்பினைகளை எமக்குத் தருகின்றன.

மாற்றம் ஒன்றைத் தவிர இங்கு மாறாமல் இருப்பவை எதுவுமில்லை. எமது மக்களின் வாழ்விடங்கள் தோறும் மகிழ்ச்சி தரும் மாற்றங்களைப் படிப்படியாக தொடர்ந்தும் பெற்றிட நாம் உறுதி கொள்வோம்.

அமைதியும், சமாதானமும் இங்கு நீடித்து நிலவ வேண்டும். சகலரும் சரி நிகர் சமன் என்ற அரசியல், சமூக உரிமைகளை எமது மக்கள் அனுபவித்து மகிழ வேண்டும்.

வீடிழந்தவர்கள், நிலமிழந்தவர்கள், ஊர் துறந்தவர்கள் என எவருமின்றி, எமது நிலம் எமக்கே சொந்தம் என்ற உரிமை இங்கு பாதுகாக்கப்பட வேண்டும்.

வறுமை ஒழிந்து, வளமிகு வாழ்வு செழித்தோங்க வேண்டும். உழைப்பதற்கான உரிமையும், ஏனைய அனைத்து அடிப்படை வசதிகளும் மேலும் சீர் செய்யப்பட வேண்டும்.

மாற்றங்களை உருவாக்குவோம் என்ற வாக்குறுதிகள், அரசியல் அதிகாரங்களைப் பெறுவதற்கு மட்டுமல்ல,..

மாறாக,... பெற்ற அதிகாரங்களை எமது மக்களின் உரிமைக்கும் வளமிகு வாழ்விற்கும் பயன்படுத்தவுமே ஆகும்.

பிறந்திருக்கும் இப்புத்தாண்டில், அரசியல் அதிகாரங்களை தம் வசம் வைத்திருப்போரை நோக்கி எமது மக்களின் சார்பாக உரிமைக்குக் குரல் கொடுப்போம்.

எமது மக்களின் மகிழ்ச்சிக்காக அவர்களுடன் சேர்ந்துழைக்க உறவுக்குக் கரமும் கொடுப்போம்.

எனத் தெரிவித்திருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் பிரகாரம் எமக்கிருக்கும் அரசியல் அதிகாரங்களையும் பிறந்திருக்கும் புத்தாண்டு எமது மக்களுக்கு மகிழ்ச்சி மிகு மாற்றங்களை தரவல்ல ஆண்டாக அமைவதற்கு தொடர்ந்தும் பயன்படுத்துவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

### அமைச்சர்...

அமைச்சர், சல்மான் குர்ஷித் மற்றும் ஆளும் காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள், பா.ஜ.க.வின் தலைவர்களையும் அவர் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

வரும் மே மாதத்துக்கு முன்னர் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ள நிலையிலும், வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையிலும், வெளிவிவகார அமைச்சரின் புதுடில்லி பயணம் இடம் பெறவுள்ளது.

---

### வாக்காளர்...

சீர்திருத்தப்படும் போது, புதிதாக சுமார் 3இலட்சம் பேர் வாக்காளர் பெயர் பட்டியலில் இணைக்கப்படுவார்கள்.

இந்த நிலையில் எதிர்வரும் காலத்தில் நடத்தப்படவுள்ள வாக்களிப்பின் போது, 2013ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர் பட்டியலின்படியே நடைபெறும்.

தற்போது கலைக்க எண்ணியுள்ள மேல் மற்றும் தென் மாகாண சபையின் வாக்களிப்பும் 2013 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலின்படியே இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### ஐ.நா. அமர்வின்...

சட்டங்களுக்கு எதிரானவையாதலால் கியூபா அதை எதிர்க்கின்றது என கியூபத்தூதுவர் இந்திரா லோப்பஸ் கூறினார். இப்படி ஒரு நாட்டைத் தனியாக தேர்ந்தெடுத்து தீர்மானம் கொண்டு வருவது ஒத்துழைப்பாகாது. இது அந்த நாட்டின் இறைமையை மீறுவதாகும். இது ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தேவையின்றி தலையிடுவதாகும்.

இது ஒரு நாட்டின்மீது தேவையில்லாத அழுத்தத்தை பிரயோகிப்பதாகும்.இது சர்வதேச சட்டத்தின் உண்மைப் பொருளாகாது என அவர் கூறினார்.இருப்பினும் அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை காரணமாக இலங்கையுடன் வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்க முடியாத நிலையில் கியூபா உள்ளதென அவர் கூறினார்.

---

### சுபீட்சத்தை...

தில் ஏற்படுத்தப்பட்ட பாரிய அபிவிருத்தி திட்டங்களின் பலாபலன்களையும் இம் மாகாணத்தில் வாழும் மக்கள் அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது என்பதை, வட மாகாண ஆளுநர் என்ற வகையில் நான் நினைவு கூருவதில் பெருமிதம் அடைகின்றேன். மேற்குறிப்பிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டல்களின் கீழ் ஜனாதிபதியின் துரித செயலணியினால் முறையாக அமுலாக்கப்பட்டன.

கண்ணி வெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன.இடம் பெயர்ந்தோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் பலர் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர். சேதமுற்ற வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளன. புதிய வீடுகள் பல நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தருணத்தில் எமது நடவடிக்கைகளை முன்னோக்கி நகர்த்துவது காலத்தின் தேவை.

மிகவும் சந்தோஷமானதும் அதிர்ஷ்டம் நிறைந்ததுமான இப்புத்தாண்டு மலரட்டும் என்று வாழ்த்துகின்றேன் என்றும் அவர் தனது வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.




## துயரங்கள் நீங்கி அவலங்கள் அகலட்டும்

சுபீட்சமான ஒளிமயமான எதிர்காலம் அமையவேண்டும் அவலங்களும் துயரங்களும் அகன்ற வாழ்க்கை அமையவேண்டும். மக்கள் எதிர்பார்க்கின்ற மன நிறைவுடைய வாழ்க்கை மலர்ந்து சிறக்க வேண்டுமென ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சாந்தியும் சமாதானமும் நிலைத்திருக்க சகஜ வாழ்வு மலரட்டும். கதிரவன் கண்ட பனிபோல் சூழ்கலி நீங்கி சுபீட்சமான சுதந்திர வாழ்வு மலர்ந்து தமிழ்தேசமெங்கும் தமிழர்களாகிய நாம் தலை நிமிர்ந்து வாழ வேண்டும்.

பிறந்திருக்கின்ற தை அவள் ஏமாற்றங்கள் எல்லாம் களைந்து உயரிய மாற்றம் கொண்டுவரவேண்டும். கல்வியும் கலையும் பண்பாடும் ஓங்கி வளர்ந்த இளம் தலைமுறை எம்மத்தியில் உருவாகவேண்டுமென்றும் இனிய வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும் என வாழ்த்துகிறேன் என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்னல்கள் நீங்கட்டும்; வாழ்வில் ஒளி பிறக்கட்டும்



வாழ்வின் தரிசனங்களே வாழ்வை உயர்த்தும். காலத்தின் கொடை என்பது கால அனுபவமே ஆகும். அந்தவகையில் நமது கடந்தகால வாழ்க்கை அனுபவங்களோடு மலரவுள்ள 2014 புத்தாண்டினை வரவேற்போம்.

சம்பிரதாயமான புத்தாண்டு வரவேற்பாக அல்லாமல் புதிய சிந்தனை, திடசங்கற்பமான தீர்மானம் ஆகியவற்றோடு வரும் புத்தாண்டினை வாழ்த்தி வரவேற்போம்.

இத்தனை ஆண்டுகால இன்னல்களிலிருந்து விடுபடுவோம் என்ற வேட்கையோடு புதிய ஆண்டில் கால்பதிப்போம்.

மலரும் புத்தாண்டு எமது அகத்தையும் புறத்தையும் ஒளியினாலும் சிறப்பினாலும் நிரப்பட்டும். இனிய வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும் என வாழ்த்துகிறேன் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பனை அபிவிருத்தியை விஸ்தரித்தல்;
## செயற்றிட்ட ஆராய்வு நேற்று



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் 2014 ஆம் வருடத்திற்கான திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தல் விரிவாக்கம் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன் பிரகாரம், உற்பத்திக் கிராமங்களை இனங்கண்டு அமைப்பது, வெளிநாட்டவர்களையும் உள்நாட்டு கொள்வனவாளர்களையும் இலக்காகக் கொண்டு புதிய விற்பனை நிலையங்களை அமைப்பது, உல்லாசப் பயணிகள் அதிகமாகக் கூடுகின்ற விற்பனை நிலையங்களுடன் இணைந்து பனை சார் உற்பத்திகளை சந்தைப்படுத்துவது, இவ்வுற்பத்திகள் தொடர்பில் உரிய பிரசாரங்களை முன்னெடுப்பது, பயிற்சிகளைப் பெறுகின்றவர்களையும் ஏற்கனவே பனை சார் உற்பத்திகளில் ஈடுபடுவோரையும் ஊக்குவிப்பது, அவர்களுக்கான மூலப் பொருட்கள், நிதி உதவிகள், உபகரணங்கள், கவச அங்கிகள் மற்றும் இலகு வங்கிக் கடன்கள் போன்றவற்றை பெற்று வழங்குவது தொடர்பில் உரிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது குறித்து நடவடிக்கைகளை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், இத்துறை சார்ந்து புதியவர்களை ஈடுபடுத்துவது, வடக்கில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இதர பகுதிகளில் விற்பனை செய்வதை உறுதிப்படுத்துவது, பனை வளம் செழிக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளிலும் அதனை நட்டு, பரவலாக்குவது, கற்பகம் விற்பனை நிலையங்களை நவீனமயப்படுத்துவது போன்ற விடயங்கள் குறித்தும் புதிய திட்டங்களை வகுப்பது குறித்தும் அதிக அவதானம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்க, அமைச்சின் பதில் செயலாளர் திருமதி. மங்கலிக்கா அதிகாரி, மேலதிக செயலாளர் சுசந்த டி சில்வா உட்பட ஏனைய அதிகாரிகள், அமைச்சரது ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம், பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம், பொது முகாமையாளர் லோகநாதன் உட்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## மானிட நேயத்துக்கு வழி திறக்கட்டும்



பிறந்திருக்கும் புது வருடம் தமிழர்களின் மனங்களில் வளம் நிறைந்த எதிர்காலத்துக்கான நம்பிக்கை தரும் ஆண்டாக மலர வேண்டுமென நாம் அனைவரும் பிரார்த்திப்போம்.

எம்மவர் மத்தியில் நிலவும் அனைத்து பேதங்கள், பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் விலக்கி உண்மையான, நேர்மையான மானிட நேயத்துக்காக பிறக்கின்ற புது வருடம் வழி வகுக்க வேண்டும்.

இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி. குகேந்திரன் (ஜெகன்) விடுத்திருக்கும் புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பல நெருக்கடிகளின் மத்தியில் எமது மக்களின் விடிவுக்காக நாம் கடந்துவந்த பாதைகள் காத்திரமான அனுபவங்களை எமககாக விட்டுச்சென்றிருககிறது.

இந்த அனுபவங்கள் இனி ஒரு முறையான மக்கள் பணிக்கு எம்மை தயார்படுத்த இப் புதுவருடம் சரியான திசைவழியை எமக்கு காட்ட வேண்டும்.

கடந்த காலங்களில் போரில் பாதிப்புக்குள்ளான மக்களுக்காக எமது செயலாளர் நாயகத்தின் வழிகாட்டலின் கீழ் பாரியதிட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். இதில் இடப்பெயர்வுக்குள்ளான பெரும் எண்ணிக்கையானோரின் வாழ்வாதாரத்துக்கு தீர்வுகள் எட்டப்பட்டிருக்கின்ற

அதுமட்டுமன்றி கணிசமா பின்தங்கிய கிராமங்களது அ விருத்தியின் அடித்தளமாக அம் மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் நாம் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

தமிழ் மக்கள் எதிர்கொண்ட அனைத்து நெருக்கடிகள், பிரச்சினைகளுக்கு தீர்வாக நாம் மேற் கொண்ட அபிவிருத்திப் பணிகள் கையில் கிடைக்க முடியாத வெறும் உரிமைக் கோஷங்களுக்காக விலைபோயிருக்கின்றன.

செழிப்பானதொரு எதிர்காலம் அமைய அனைத்து மக்களுக்கும் எனது இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்று அவர தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடமராட்சியில் விபத்து; இராணுவ வீரர் காயம்

(வடமராட்சி)

வடமராட்சி உடுப்பிட்டி பொக்கணைச் சந்தியில் நேற்றுப் பகல் 1.30 மணியளவில் ஏற்பட்ட விபத்துச் சம்பவத்தில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

உடுப்பிட்டி இராணுவ முகாமிலிருந்து தொண்டைமானாறு பகுதியிலுள்ள காவலரணுக்கு துவிச்சக்கர வண்டியில் உணவு எடுத்துக்கொண்டு சென்ற வேளை வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நேர்ந்துள்ளது.

கண்டி பேராதனையைச் சேர்ந்த செங்கடகல (வயது - 26) என்ற இராயணுவ வீரரே காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸார் மோட்டார் சைக்கிளை எடுத்துச்சென்றுள்ளதுடன், அதில் வந்த இருவரையும் கைதுசெய்துள்ளனர். (116)

## கடற்படை வீரருக்கு விளக்கமறியல்

திருகோணமலை, திரியாய் பகுதியில் 4 வயதுச் சிறுமியை வல்லுறவுக்குட்படுத்தியதாகக் கூறப்படும் கடற்படை வீரரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதவான் தி.திருச்செந்தில்நாதன் உத்தரவிட்டுள்ளார்.

திரியாய் 5 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் சிறுமியொருவரை கடந்த ஞாயிற்றக்கிழமை வல்லுறவுக்கு உட்படுத்தியதாக மேற்படி கடற்படை வீரர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

இந்நிலையில், மேற்படி கடற்படை வீரரை கைதுசெய்த பொலிஸார் அந்நபரை கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே இந்நபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## போக்குவரத்து விதிகளை விளக்க மாதம் தோறும் கருத்தரங்கு

போக்குவரத்து விதிகள் தொடர்பாக மாதம்தோறும் விசேட கருத்தரங்கு இடம்பெறவுள்ளதாக யாழ். போக்குவரத்து பொலிஸ் அதிகாரி சமிந்த டி சில்வா தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் போக்குவரத்து விதிமுறைகள் குறித்த கருத்தரங்கை யாழ். பொது நூலகத்தில் நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் யாழ். மாவட்டத்திலுள்ள 9 பொலிஸ் நிலையங்களின் போக்குவ்ரத்து பொலிஸ் அதிகாரிகள், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், தனியார் போக்குவரத்து சாரதிகள் சங்கத்தினர், இலங்கை போக்குவரத்து சாரதிகள், அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், சாரதி பயிற்சிச்சாலை அதிகாரிகள், அரச திணைக்களத் தலைவர்கள் என பெருமளவிலான தரப்பினருக்கு இச்செயலமர்வு குறித்து அறிவிக்கப்படுவதுடன், இது இடம்பெறும் திகதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனவும் சமிந்த டி சில்வா தெரிவித்தார். (இ)

## புலிகள் சுட்டு வீழ்த்திய விமானச் சிதைவுகள் பார்வைக்கு

இரணைதீவுக்கு அப்பால் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயர் விமானத்தின் சிதைவுகள் மற்றும் மீட்கப்பட்ட பொருட்கள் அடையாளம் காண்பதற்காக யாழ்ப்பாணத்தில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது. 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயார் விமானத்தின் பாகங்களும் பயணிகளின் ஆடைகள் போன்றவையும் அந்த விமானத்தை ஓட்டிச் சென்ற ரஷ்ய விமானியின் தங்கப் பல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த விமானம் இரணைதீவில் இருந்து வடபகுதியில் சுமார் 4 கடல் மைல்களுக்கு அப்பால் கடலில் தரைமட்டத்தில் மூழ்கியிருந்தது. இதனை மீட்கும் பணிகள் இவ்வாண்டு மே மாதம் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரையில் இடம்பெற்றன.

இந்த விமானத்தில் 4 ரஷ்ய விமானிகள் உட்பட 7 விமான சிப்பந்திகளும் 48 பயணிகளும் 3 விமான உபசரணையாளர்களும் இருந்தனர். இந்த விமானத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பயணிகளின் எலும்புகள், ஆடைகள் போன்ற பொருட்கள் ஜனவரி மாதம் 11,12 ஆம் திகதிகளில் துரையப்பா மைதானத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

பயணிகளின் உறவினர்கள் அன்றைய தினம் அங்கு வந்து அப்பொருட்களை அடையாளம் காட்டுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பச்சிலைப்பள்ளிக்கு புதிய பிரதேச செயலர்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராக திருமதி ப.ஜெயராணி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் தனது பதவிப் பொறுப்புக்களை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்.

அதேவேளை ஏற்கனவே பச்சிலைப்பள்ளியில் பிரதேச செயலராக கடமையாற்றிய எஸ்.சத்தியசீலன் பூநகரி பிரதேச செயலராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பூநகரியில் இதுவரை பிரதேச செயலராக கடமையாற்றிய வசந்தகுமார் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு இடம்மாற்றப்பட்டிருக்கிறார். (130)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.